

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆவணி - புரட்டாசி

மலர் 11 செப்டம்பர் 2022 இதழ் 9

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் | 18 |
| ஸர்வம் பிரம்மமயம் | 19 |
| புரட்டாசி மாத விசேஷ தினங்கள் | 25 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 26 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 29 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 31 |
| மஹாளய ச்ரார்த்தம் | 33 |
| ஸங்கர கீதை | 36 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 41 |
| புராணக்கதை | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 47 |




भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

ரஸமாயிருக்கும் பித்ருக்களுக்கு நமஸ்காரம், பலமாயுள்ள பித்ருக்களுக்கு நமஸ்காரம், ஜீவனாயுள்ள பித்ருக்களுக்கு நமஸ்காரம், ஸ்வதாவாயிருக்கும் பித்ருக்களுக்கு நமஸ்காரம், கோபமாய், கோரமாயுள்ள பித்ருக்களுக்கு நமஸ்காரம். இவ்வுலகிலும் அவ்வுலகிலும் இருப்பவர்களே, தனமுடையவர்களே இவ்வுலகில் நாங்கள் தனமுடையவராயிருக்க அருள் புரியுங்கள்.

**(க்ருஷ்ண யஜுர் வேதம் 3-2-5)**

ஜன்மத்தை அளிப்பவரும், எல்லா தேவர்களின் வடிவானவரும், ஸுகம் தருபவரும், ப்ரஸன்னமாயிருப்பவரும், மகிழ்பவரும் மகாத்மாவான பித்ரு தேவரே நமஸ்காரம். 1

எல்லா யக்ஞ சொரூபரும், ஸ்வர்கமாயிருப்பவரும், எல்லா தீர்த்தங்களை கண்டவரும் கருணைக் கடலாயிருப்பவருமான பரமேஷ்டியே உமக்கு நமஸ்காரம். 2

எப்போதும் விரைவில் மகிழ்பவரும், சிவ வடிவானவரும், பிழைகளைப் பொறுப்பவரும், ஸுகத்தைத் தருபவருமான பித்ரு தேவரே உமக்கு நமஸ்காரம். 3

கிடைத்ததற்கரியதும், தர்மார்த்தங்களை பெறுதற் பொருட்டு அமைந்ததுமான இந்த உடலை எவர் மூலம் அடைந்தேனோ அத்தகைய பித்ரு தேவருக்கு நமஸ்காரம். 4

எவருடைய தர்சனம், தீர்த்தம், ஸ்னானம், தவம், ஹோமம், ஜபம் முதலியவற்றின் பலனாக அமையுமோ அத்தகைய மகா குருவுக்கும் குருவான பித்ரு தேவருக்கு நமஸ்காரம். 5

யாருக்குச் செய்யும் நமஸ்காரமும் ஸ்தோத்ரங்களும், கோடி முறை தர்ப்பணம் செய்வதற்கும், நூறு அஸ்வ மேத யாகங்கள் செய்வதற்கும் ஈடாகுமோ அத்தகைய பித்ரு தேவருக்கு நமஸ்காரம். 6

காலை எழுந்ததும், பித்ரு ஸ்ராத்தத்திலும், தன் பிறந்த நாளிலும் பித்ருவின் முன் எவன் இந்த ஸ்தவத்தைப் படிக்கிறானோ அவனுக்கு அடையக்கூடாதது ஒன்றுமில்லை. 7

ஒருவன் பல விதமான பாபங்களைச் செய்த போதிலும் பித்ரு தேவரை ஸ்தோத்ரம் செய்தால் அவன் ப்ராயச்சித்தம் செய்து ஸுகமடையலாம். பித்ருக்களை மகிழ்வித்த அவன் எல்லா கர்மாக்களிலும் அருகதையுடையவனாகிறான். 8

(பித்ருஸ்துதி ப்ருஹத்தர்ம புராணம்)

# ஆசிரியர் பக்கம்

# ஆன்மீக தேசியம்

இந்த பாரத நாடு, நாம் வாழும் நாடு முன்னேற்றம் அடைந்து விட்ட நாடு என்று சிலரும், இல்லை முன்னேறும் நாடு என்று சிலரும் சொல்கின்றனர். ப்ரசாரமும் செய்கின்றனர். இதில் எது உண்மை? பல வருடங்களாக உரமிட்டு வளர்ந்த இந்த நாடு தற்போதைய நிலையில் பல உன்னதங்களை எட்டிப் பிடித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. வல்லரசாகினாலும் நல்லரசாக ஆக முயல்கிறது. ஆனால் எப்போதைக்கும் இல்லாத ஒரு பெரும் குறை இப்போது அதிகரித்துள்ளது. ஒன்று அல்ல பல. அவைகளில் பிரிவினை வாதம், கட்டாய மத மாற்றம் போன்றவை. இதில் பிரிவினை வாதம் ''பாரதம் பல மாநிலங்களின் கூட்டு'' என்னும் சித்தாந்ததுடன் இயங்குகிறது. இளைய சமுதாயத்தை பீடிக்கும் நோயாக உள்ளது. இன்னொரு பக்கம் நமது கலாசாரத்தை விட்டு, ஆன்மீகத்தை விட்டு இளைய சமுதாயம் வேறு மதத்திற்கு மாறுகிறது.

இதற்குக் காரணம் அடிப்படையில் தேசபக்தி இல்லாததால்தான். நமது கல்வி முறையில் தேசபக்தியும், ஆன்மீகமும் இல்லை. சிறுவயதிலிருந்தே இந்த இரண்டும் இருந்தால் சமுதாயம் நன்றாக வளரும். இந்த ஸமயத்தில் கொள்கையில் இந்த இரண்டு விஷயங்களையும் ஆதாரமாக வைத்து பாடல்களை யாத்த பாரதியாரை நினைக்காமல் இருக்க முடியவில்லை. வாழ்ந்தது சொற்பகாலமே. அதற்குள் அவர் யாத்தது பல கோடி. வளமான, எளிமையான தமிழ், வீரமிக்கச் சொற்கட்டு, தூங்குபவனையும் உசுப்பி எழுப்பிவிடும் சந்தம். ''நாம் எல்லோரும் பாரதப் புதல்வர்கள்'' ''வந்தே மாதரம் என்போம்'' ''ஜய பேரிகைக் கொட்டடா'' இப்படி சுதந்திர கோஷங்களுடன் அவர் யாத்தப் பாடல்கள் அனந்தம். நமது சாஸ்த்ரங்களை கற்றுணர்ந்தவர், வேதங்களைப் பயின்றவர், ஸம்ஸ்க்ருத மொழியை கற்றுணர்ந்தவர் அபேத உணர்வுடன் இருந்தவர் தேசியத்தையும் ஆன்மீகத்தையும் இணைத்தவர்.

நாம் ப்ரிட்டிஷாருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்களால்தான் பங்கிம் சடர்ஜி, ரபீந்த்ரனாத் தாகுர், சுப்ரமண்ய பாரதியார் போன்றோர்கள் கிடைத்தார்கள். தமிழகம் செய்த பாக்யம் பாரதி கிடைத்தது. தீவிரவாதியாக வலம் வந்தவர். ப்ரிட்டிஷாரின் தீவிர

கண்காணிப்பில் இருந்தவர். சில விஷயங்களில் ஸனாதன தர்மத்துடன் ஒத்துப் போகவில்லையானாலும் அவர் செய்தது இமாலயச் சாதனை.

'நிரங்குசா: கவய:' கவிகள் சுதந்திரமானவர்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். க்ருஷ்ணப் ப்ரேமையுடன் அவர் எழுதிய கண்ணன் பாட்டுகள், துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதிகளின் மீது யாத்த பாடல்கள் பல வசன கவிதைகள் பாஞ்சாலி சபதம் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். ஆன்மீகத்தை தேசியத்துடன் இணைத்தவர் அவர்.

சிவாஜி தன் வீரர்களுக்குச் சொல்லும் உரையில்

**''பாரத நாடு பழம் பெரும் நாடு நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்''**

என்று பாரதப்புகழ் பேசுவார்.

**'வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்''**

'வந்தே மாதரம் ஜய வந்தே மாதரம்' 'வெற்றி எட்டு திக்கும் கொட்டு முரசே' 'வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே' 'தாயின் மணிக்கொடி பாரீர்' 'பாரத ஸமுதாயம் வாழ்கவே' இப்படிப் பல பாடல்களில் நாட்டுப்பற்றை அழுத்தம் திருத்தமாகக் காட்டியவர். பாரத தேசம் ஒரே தேசம் அதில் பிரிவினை கிடையாது எனபதற்கு 'முப்பது கோடி முகமுடையாள் உயிர் மெளம்புற ஒன்றுடையாள் இவள் செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' 'முப்பதுகோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடமை ஒப்பில்லாத சமுதாயம் உலகுக்கொரு புதுமை' இப்படிப் பல பாடல்களைக் காட்டாலாம். அந்த பெருமை வாய்ந்த கவிஞன் பெருமையை மீண்டும் நம் நாட்டில் இளைய சமுதாயத்தினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இவை எல்லாமே வாசகர்களுக்குத் தெரியும் என்றாலும் இப்போது இருக்கும் நிலைமை மோசமாக இருப்பதால் சொல்ல வேண்டியதாகிறது. அறத்தைக் கூறுவதில் புனருக்தி தோஷம் வராது என்னும் தைர்யம்தான் செய்ய வேண்டியது. ஏற்கனவே ஸங்கீத கலைஞர்கள் பாடும் போது அவர் பாடல்களை பாடுகிறார்கள். இன்னும் பல புதிய பாடல்களை அவர்கள் பாடினால் நலம். நடன சிகாமணிகள் புதிய பாடல்களை நாட்டியத்தில் புகுத்த வேண்டும். மேலும் தெருக் கூத்து எப்படிப் பட்டி தொட்டிகளில் உள்ளதோ அதேபோல் அவர்கள் மூலமாகவே சிறார்களுக்கு பாரதி பாடல்களைப்

பரப்பலாம். இன்றைய தேவை அப்படிப்பட்டதாக உள்ளது. மாபெரும் இடரில் நம் இளைய சமுதாயம் இருப்பதால்தான் இது பற்றி விரிவாகப் பேசுகிறோம். எல்லாருடைய பங்கும் இதில் உள்ளது. செப்டம்பர் மாதம் அவரை நினைப்போம். 'ஒளி படைத்த கண்ணர்கள்' வர, ஒன்றுபட்ட பாரத ஸமுதாயம் மலர நம் பங்கைச் செய்வோம். வாழ்க பாரதி! என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# பன்னிரு நாமங்கள்; நெற்றிக்கிடும் நாமம்

அடுத்த ச்லோகம் :

**தாமோதர குணமந்திர**
**ஸுந்தரவதநாரவிந்த கோவிந்த ।**
**பவஜலதி மதந மந்தர**
**பரமந்தரம் அபநய த்வம் மே ॥**

''ந்த'' என்ற சப்தம் திரும்பத் திரும்ப வருகிற மாதிரி மதுரமான பதங்களினால் ச்லோகத்தைச் செய்திருக்கிறார் நம்முடைய ஆசார்யாள். ஒவ்வொரு வரியிலும் இந்த சப்தம் வரவேண்டும் என்பதால் நாலாவது வரியில் இரண்டு பதங்களின் ஸந்தியில் 'பரமந்தரம்' என்று வைத்திருக்கிறார். பரமம் - தரம் என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்து 'பரமந்தரம்' என்றாகியிருக்கிறது. 'அநேகதம் - தம்' என்பது 'அநேகதந்தம்' என்றான மாதிரி.



முதல் இரண்டு வரிகளில் பகவானைக் கூப்பிடுகிறார். 'தாமோதர, கோவிந்த' என்ற இரண்டு பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார். 'குணமந்திர', 'ஸுந்தர வதநார விந்த'

என்பதெல்லாமும் ஸ்வாமியை அழைப்பதுதான். ஆனால் தாமோதரன், கோவிந்தன் என்பன பகவானின் ப்ரஸித்த நாமாக்களாகவே இருப்பவை.

பன்னிரண்டு நாமாக்கள் மஹாவிஷ்ணுவுக்கு முக்யம். பரமேச்வரனுக்கு (சிவபெருமானுக்கு) பவன், சர்வன், ஈசானன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பீமன், மஹாதேவன் என்ற அஷ்ட நாமாக்கள் முக்யமாயிருப்பது போல் மஹா விஷ்ணுவுக்குப் பன்னிரண்டு. ஸஹஸ்ர நாமம், த்ரிசதி (முந்நூறு நாமம்), அஷ்டோத்தர சதம் (108 நாமம்) முதலியன சொல்லி அர்ச்சனை பண்ணினாலும் முடிவில் இந்த அஷ்ட நாமாவையோ, த்வாதச (பன்னிரண்டு) நாமாவையோ சொல்லி முறையே ஈச்வரனையும், பெருமாளையும் அர்ச்சனை பண்ணவேண்டும். அஷ்டோத்தரம் முதலியன பண்ண முடியாதபோது இந்த எட்டு அல்லது பன்னிரண்டு நாமாக்களை மட்டும் மனஸாரச் சொல்லி அர்ச்சனை பண்ணினால் போதும் என்று சொல்லி இருக்கிறது. பிள்ளையாருக்கும் இப்படி விசேஷமான நாமாக்களாகப் பதினாறைச் சொல்லியிருக்கிறது.

மஹா விஷ்ணுவுக்கு த்வாதச நாமாக்கள் முக்யமானவை. வைஷ்ணவர்களாக இருக்கப்பட்டவர் நெற்றியிலே போட்டுக் கொள்வதை 'நாமம்' என்று சொல்கிறோம். இந்தப் பேர் எப்படி வந்தது? வைஷ்ணவர், சைவர், ஸ்மார்த்தர், மாத்வர் யாவரும் நெற்றியில் மட்டுமில்லாமல் மார்பு, வயிறு, புஜம், மணிக்கட்டு முதலான இடங்களில் நாமமோ, விபூதியோ, கோபி சந்தனமோ இட்டுக் கொள்ள வேண்டும். ஆசார சீலர்கள் இப்படியே இன்றைக்கும் செய்கிறார்கள். இப்படிப் பன்னிரண்டு இடங்களில் நாமம் போட்டுக் கொள்ளவேண்டும். 'த்வாதச நாமம் போட்டுக் கொண்டு வந்தார்' என்று சொல்கிறோம். மஹா விஷ்ணுவுக்கு ரொம்பவும் ப்ரீதியாக இருக்கப்பட்ட பன்னிரண்டு நாமாக்களில் (பெயர்களில்) ஒவ்வொன்றுக்கும் அடையாளமாக சரீரத்தின் ஒவ்வொரு இடத்திலும் உலகளந்தவனும், உலகமே உருவானவனுமான பகவான் நினைப்போடு திருமண் இட்டுக் கொள்ள வேண்டும் என்பதே தாத்பர்யம். இப்படி பகவானின் த்வாதச நாமாக்களுக்கு அடையாளமாக இருப்பதாலேயே இந்தப் பன்னிரண்டு திருமண் சின்னங்களுக்கும் த்வாதச நாமம் போடுவது என்று பேர் வந்தது. அப்புறம் திருமண் சின்னத்துக்கே ''நாமம்'' என்று பேராகிவிட்டது.

இந்தப் பன்னிரண்டு நாமாக்களையே ஆசமனம் செய்யும் போதும் நாம் சொல்லி கன்னம், கண், மூக்கு, காது, புஜம், ஹ்ருதயம், தலை முதலான அவயவங்களைத் தொட்டுக் கொள்கிறோம்.

கேசவ - நாராயண - மா தவ - கோவிந்த - விஷ்ணு - மதுஸூதன - த்ரிவிக்ரம - வாமன -ஸ்ரீதர-ஹ்ருஷீகேச பத்மநாப - தாமோதர என்பவையே இந்தப் பன்னிரண்டு நாமாக்கள்.

இதிலே வேடிக்கையாக, முக்யமான அவதாரங்களான க்ருஷ்ண, ராம என்ற இரண்டு பெயர்களும் இல்லை. ஆனாலும் கேசவன், கோவிந்தன், தாமோதரன் முதலானவை க்ருஷ்ண பரமாத்மாவின் பெயர்கள் தான். 'கேசி' என்ற அஸுரனைக் கொன்றதால் கேசவன்; கோக்களை (பசுக்களை) ரக்ஷித்த தால் கோவிந்தன்.

# தாமோதரன்

'தாமோதரன்' என்றால், கயிற்றால் கட்டப்பட்ட வயிற்றை உடையவன்' என்று அர்த்தம். தாமம் என்றால் கயிறு, 'கேஸ் பெட்டி', 'கேட் வாசல்' என்று ஒரே அர்த்தமுள்ள இரண்டு வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்கிற மாதிரி 'தாமக் கயிறு' என்று சொல்லிச் சொல்லித்தான் 'தாம்புக் கயிறு' என்று வந்துவிட்டது!

தாமம்- கயிறு; உதரம். வயிறு. கயிற்று வயிற்றனே தாமோதரன்.

'வெண்ணெய் திருடுகிறாயா? உன்னைக் கட்டிப் போடுகிறேன், பார்' என்று யசோதை பாலக்ருஷ்ணனைப் பிடித்துக் கயிற்றால் கட்டிப் போடப் பார்த்தாள். அவள் எத்தனை கயிறுகளைச் சேர்த்து ஒட்டுப் போட்டுக் கொண்டே போன போதிலும் தன்னுடைய சின்ன வயிற்றைச் சுற்றிக் கட்டுவதற்குப் போதாதபடி மாயாஜாலம் பண்ணினார் பகவான். அப்புறம் அவள் வேர்த்து விருவிருத்துப் போனதைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத் தாமாகவே கயிற்றிலே கட்டுப்பட்டார். அந்த அவஸரத்திலேதான் 'தாமோதரன்' என்று பேர் ஏற்பட்டது. 'உரலோடு சேர்த்து யசோதை கட்டிப்போட, மிருதுவான உன் வயிற்றைக் கயிறு உறுத்தும்படி எளிமையாகக் கட்டுப்பட்டாயே!' என்று ஆழ்வாராதிகள் இதை உருகி உருகிப் பாடி அநுபவித்திருக்கிறார்கள். 'தான் பக்தர்களின் அன்புக்குக் கட்டுப்படும் பக்த பராதீனன்; ஆனாலும் அவர்கள் 'என்னால் கட்டிவிட முடியுமாக்கும் என்று அஹம்பாவத்தோடு நினைக்கிறவரையில் தன்னைக் கட்டமுடியாது; தானே கருணை கொண்டு கட்டுப்பட மனஸ் வைத்தால் தான் முடியும் என்று காட்டுபவன் தாமோதரன். பிற்பாடு பாரத யுத்தம் ஏற்படுவதற்கு முன், ஸ்வாதீன ப்ரேமையில் ஸஹாதேவன் 'உன்னைக் கட்டிப் போடுகிறேன் பார்' என்று ஸவால் விட்டபோது, அவன் நிஜமாகவே கட்டிப் போடும்படியாகவும் பகவான் நின்றிருக்கிறான். தாமோதரனாய் இருக்கும்போது, இந்த ஷட்பதீ ஸ்தோத்ர

ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ள விநயத்தோடு கூடிய பக்தியை எடுத்துக் காட்டியிருக்கிறான்.

''தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை' என்று ஆண்டாள் சொல்லியிருக்கிறாள். தன்னை தரித்த தாயாரான தேவகியின் குடலைத் தன்னுடைய கர்ப்பவாஸத்தால் பரிசுத்தி பண்ணிவிட்டான் என்பது அவள் சொல்வதற்கு அர்த்தம். எவனது குடலுக்கு வெளியிலே மேல் பக்கம் தாம்புக்கயிற்றைப் போட்டு வளர்ப்புத் தாய் யசோதை புண்ணாக, அழுக்காக ஆகும்படிச் செய்தாளோ அவன் தன் ஜனக மாதாவின் (பெற்ற தாயாரின்) குடலை தன்னுடைய வாஸத்தாலேயே தூய்மை செய்தவனாக்கும் என்று காட்டியிருக்கிறாள்.

இது பக்தி பூர்வமாகச் சொல்கிற அர்த்தம். Philosophical ஆக (தத்வரீதியில்) 'தாம உதரன்' என்றால் எல்லாவற்றுக்கும் இருப்பிடமான வயிற்றைக் கொண்டவன். அதாவது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பவன் என்று அர்த்தம் பண்ணுவார்கள்.


ஜய ஜய சங்கர — உ — ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்


# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மண் ஆசைகள்

மண் ஆசைப்பட்டும் ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும் என்றும் ஆசைப்பட்டும் எத்தனையோ கோடிப்பேர் செத்திருக்கிறார்கள். மகாபாரதத்திலே அத்தனை பேர் போயிருக்கிறார்கள். இன்னும் பல சமயங்களிலே அரசர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதும்கூட உலகம் பூராவும் மண்ணாசைப் பட்டு எத்தனையோ பேர் சண்டை போட்டுக் கொண்டு செத்துப்போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்படி மண்ணின்மீது ஆசைப்பட்டு அகங்காரத்தோடு இருக்கக் கூடாது. நல்லவர்களோடு சேர்ந்து நல்லவிதமாக, உண்மையான சகோதரத்துவத்தோடு சமாதானமாக வேண்டும் என்பதை நமது இதிகாசங்கள் எல்லாம் சொல்கின்றன. நாம் எத்தனையோ நல்ல நூல்களைப் படித்து, சிந்தித்து, அவற்றை மனதில் கொண்டு நல்லவர்களாக வாழ்ந்து வர வேண்டும். பல பாஷை, பல மனிதர்களின் பழக்க வழக்கங்கள் இருந்தாலும் நாம் எல்லோருமே இறைவனுடைய குழந்தைகள் என்ற ஆன்மிகச்



சிந்தனையின் அடிப்படையில் வாழ வேண்டும்.

நாம் எல்லோரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற கருத்தை மனத்தில் கொண்டு, ஒற்றுமையோடு ஒரே ஒரு ஆண்டவனான பரமேஸ்வரனை வணங்கி அவனுடைய அருளால் எல்லா வளமும் பெற வேண்டும் என்று கூறி வாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்.

ஜெயஜெய சங்கர...

ஹரஹர சங்கர...

# ஆன்மிகமும் தமிழ்நாடும்

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிவன் கோயில், ஒரு பெருமாள் கோயில், ஒரு அம்மன் கோயில் இருக்க வேண்டும்.

இப்போது எங்கு பார்த்தாலும் கிராம சக்திகளின் வழிபாடும், திருவிழாக்களும் நடைபெற்று வருகிறது.

இந்தக் கோடைக் காலத்தில் கிராம சக்தி வழிபாடு கட்டாயம் நடைபெற வேண்டும். அது ஒரு வழக்கம்.

சிவனுக்கு சிவராத்திரி

பெருமாளுக்கு வைகுண்ட ஏகாதசி

அம்பாளுக்கு நவராத்திரி..

கிராமங்களில் வெயில் காலங்களில், அறுவடையெல்லாம் முடிந்து சும்மா இருக்கும் காலத்தில் கிராம சக்தி வழிபாடுகளை நடத்துவார்கள். பத்து நாட்கள் திருவிழாவைச் சிறப்பாக கொண்டாடுவார்கள்.

கிராம சக்தி வழிபாட்டில்தான் அத்தனை பேரும் ஒற்றுமையாக இருந்து கொண்டாடுவார்கள்.

காலையில் எழுந்தவுடன் ஒவ்வொருவரும் ஸ்ரீஹரி சரணம், ஸ்ரீஹரி சரணம், ஸ்ரீஹரி சரணம் என்று நம்மைக் காக்கும் விஷ்ணுவை நமஸ்கரித்து வணங்க வேண்டும். மாலையில் சிவனை, ஜெயஜெய சங்கர, ஹரஹர சங்கர... என்று வழிபட வேண்டும்.

நமக்கு எல்லாம் சாந்தி அளித்து ஞானத்தைத் தரும் சிவனை வழிபட வேண்டும். இரண்டு நேரமும் இரண்டு விதமான வழிபாடுகளைச் செய்து வர வேண்டும்.

சிவன்-விஷ்ணு இரண்டும் வேறுவேறு அல்ல. ஆனாலும் இரண்டு பேருக்கும் ஒரே கோயிலில் இரண்டு மூர்த்தங்கள் இருக்கும்.

கிராம சக்தியின் வளர்ச்சியினால் கிராமங்களில் நல்ல மழை வரும். அம்மை போன்ற கொடிய நோய்கள் வராது. நல்ல விதமாக சாகுபடிகள் நடைபெறும்.

ஒவ்வொரு ஊரிலும் விக்ரக வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் ‘அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே’ என்று பகவானின் அருளைப்பெற கிராமத்தவர்கள் முன்வர வேண்டும்.

தேவாரம் பாடிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியும், திருவாசகம் பாடிய மாணிக்க வாசகரும் போற்றப்பட வேண்டிய நால்வர் பெருமக்கள்.

இவர்கள் எல்லாம் இறைவன்மீது பக்திகொண்டு பாடல்களைப் பாடி இருக்கிறார்கள்.

அவர்கள் பாடிய கோயில்களுக்குப் 'பாடல் பெற்ற க்ஷேத்திரங்கள்' என்று பெயர். அந்தப் பாடல்களால் பலப்பல கோயில்களில் ஏராளமான அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

## அற்புதங்கள்

இப்போது எல்லாம் ஆங்காங்கு 'அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள்' என்று மாற்று மதத்தினர் கூட்டங்கள் போடுகிறார்கள்.

இதுவெல்லாம் புதிது ஒன்றும் இல்லை. இதற்கும் முன்னதாகவே நம்முடைய சமயத்தில் பற்பல அற்புதங்களை நடத்தியிருக்கிறார்கள். திருநாவுக்கரசு சுவாமிக்கு இறைவனே 'ஆட்கொண்டு' அருள் கொடுத்தார்.

திருநாவுக்கரசு சுவாமிக்கு 'அப்பர்' என்று நாமம் சூட்டி வணங்கினர். திருநாவுக்கரசருக்கு வயிற்று வலியை இறைவன் கொடுத்து குணமாக்கி, அதன் மூலம் அவரைத் தனது பக்தனாக்கிக் கொண்டார்.

சுந்தரர் பெருமானுக்கும் அருள் செய்து அவரை, 'பித்தா பிறைசூடி பெருமானே' என்று பாட வைத்து அன்பராக்கினார்.

ஞானசம்பந்தர் பெருமானுக்கு ஞானப் பாலைக் கொடுத்து அற்புதங்கள் புரிந்து ஆட்கொண்டார். அந்த மூவரும் பலவிதமான சைவப் பணிகளைச் செய்து கிராமம் கிராமமாகச் சென்று சைவத்தைச் சொல்லி, கிராம மக்களின் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

இறைவனிடம் மக்களுக்காகப் பிராத்தனைகள் செய்து, அவர்களுக்கு நிறைய அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள்.

இறந்து போன பெண்ணைக் கூட மீட்டு உயிர்ப் பித்திருக்கிறார் திருஞான சம்பந்தர். பேச்சு இல்லாத குழந்தையைப் பேச வைத்திருக்கிறார் மாணிக்கவாசகர். கண் கெட்டபோது சுந்தரருக்கு இறைவனே வந்து கண் கொடுக்கிறார். பூட்டு கிடையாது; சாவி கிடையாது; வெறும் பாட்டுப் பாடியே கோயில் கதவுகளைத் திறந்து மூடினார்கள் ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்!

இப்படிப்பட்ட அற்புதங்கள் எல்லாம் எப்போதோ நம் சமய வரலாற்றில் நடந்திருக்கின்றன. இன்றைக்கு மாற்று மதத்தினர்கள் நடத்துவது எல்லாம் வெறும் பேச்சுக் கூட்டங்கள். அந்தக் காலத்தில் அற்புதங்களோடுதான் கூட்டம் நடக்கும். மக்கள் முன்னால பிரத்யட்சமாக அற்புதங்களை நடத்திக் காட்டினார்கள்.

மதுரையில் பாண்டிய ராஜாவுக்கு வெப்பு நோய் வந்தது. அவருக்கு திருநீறு கொடுத்து, 'மந்திரமாவது நீறு; வானவர் மேலது நீறு' என்ற பதிகத்தைப் பாடி சுகமாக்கினார் ஞானசம்பந்தர்.

அப்போதிருந்துதான் நாம் எல்லாம் திருநீறு பூசும் வழக்கமும் வந்தது. அப்படி எல்லாம் அற்புதங்கள் செய்து நம்முடைய சமயத்தை கட்டிக் காத்து வந்தார்கள் நம் அருளாளர்கள்.

இந்தக் கதைகளை எல்லாம் நீங்களும் தெரிந்து கொண்டு அதன்படி இறைவன் மீது பக்தி செலுத்தி வரவேண்டும்.

வைகை ஆற்றிலே வெள்ளம் வந்த போது, அதை அடைக்கும் முயற்சியில்லாமல் இருந்தவனுக்கு முதுகிலே பிரம்படி கொடுத்தார் பாண்டியன். அது எல்லோர் முதுகிலும் விழுந்தது!

அப்போது பிட்டுக்காக மண் சுமந்தவர் சிவபெருமான். அந்தப் பிரம்படியால் தான், எங்கும் நிறைந்தவன் என்பதை மக்களுக்கு உணர்த்தியவர் சிவன்.

மதுரையில் அவர் செய்த லீலைகள் எல்லாம் எவ்வளவோ இருக்கிறது. அது போன்ற அதிசயங்களை உலகில் வேறு எங்குமே காண முடியாது.

அவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு, புராணக் கதைகளை எல்லாம் படித்து அதிலே உள்ள தத்து வார்த்தங்களையெல்லாம் புரிந்து கொண்டு, மனம் சஞ்சலப்படாமல் ஒருமையாக இருந்து பக்தி செலுத்த வேண்டும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் எத்தனை கஷ்டம் வந்தாலும் 'நற்றுணை ஆவது நமச் சிவாயவே' என்று பாடினார். அதுபோல் உங்களுக்கு எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற ஒரே நம்பிக்கை வேண்டும்.

இறைவன் இருக்கிறானா, காப்பாற்றுவானா? என்ற வாதமே கூடாது.

'நம்மைக் காப்பது நமச்சிவாயமே' என்ற நம்பிக்கையோடு இறைவனை எப்போதும் வணங்கி இறையருளைப் பெற்று வாழ வேண்டும்.

ஜெயஜெய சங்கர...

ஹர ஹர சங்கர...

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

**காகிநாடாவில் சுதந்திர தினம் முன்னிட்டு பெரியவா அவர்கள் ஆற்றிய உரை 15.8.2022**



தர்மத்தை காப்பாற்றும் தேசம் நமது பாரத தேசம். இந்த பாரத தேசம், ஆதிபத்யம் என்ன என்பதை காண்பிக்கிறது. ஆதிபத்யம் என்றால் அனைவரையும் அருகில் அழைத்துக் கொண்டு வந்து, பிரஜைகளுக்கு நல்ல செயல்கள் செய்ய வேண்டும். சாதாரண உலகத்தில் காண்பிக்கும் ஆதிபத்யம் என்பது வேறு. ஆனால், இடத்திற்கு தகுந்தாற்ப் போல், தெரிந்து கொள்ள வேண்டியது பல.

ஆதிபத்யம் என்பது இந்த பாரத தேசத்தில் நன்றாக செய்து வந்தார்கள்., கர்மேந்திரிய வியாபாரம், ஞானேந்திரிய வியாபாரம். சங்கல்பம். நமது வேத பண்டிதர்கள் சங்கல்பம் செய்யும் சமயம் -கர்மேந்திரிய, ஞானேந்திரிய வியாபாரஹை ஹி - அனைத்தும் கூறுகிறார்கள்.

நிலம், கல், காலம், செடி அனைத்துடன் என்ன செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும் என்ற கல்வியை கற்பிக்க வேண்டும். பரஸ்பரத்துடன், வெறுப்பு இல்லாமல், பொறாமை இல்லாமல், சாத்வீகமுடன் அமைதியை ஸ்ரத்தையுடன் அணுக வேண்டும்.

நான் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் தவறில்லை. அனைவரிடம் இறைவனின் ஸ்ரிஷ்டியில் ஒரு நல்ல **விஷயம் உள்ளது.**

**'ஈஸாவாஸ்யம் இதம் சர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்**
**தேன த்யக்தேன புஞ்சீதா மாக்ருத: கஸ்யஸ்வித்தனம்'**

மற்றவரின் சொத்திற்கு ஆசைப்படாமல், பொருளுக்கு ஆசைப் படாமல், அனைவரையும் கௌரவம் செய்தல்; இந்த தேசம் அனைவரையும் வரவேற்ற தேசம். யாரையும் நிராகரித்த தேசம் அல்ல. ஆதலால், யாரிடம் எல்லாம் நல்ல சக்தி உள்ளதோ, அதை ஆதரித்து, வரவேற்று, ஆதரித்து, அவர்களுக்கு சன்மானம் செய்த நாடு நமது தேசம்.

அநேக உற்சவங்கள் நடக்கின்றன. கோவில்கள் கட்டியபின், பணி முடிந்து விட்டது என்று நிறுத்துவதில்லை. சிற்பம் செய்தவர்களை கௌரவித்தல் நடைபெறுகின்றது. பிரமோற்சவம் செய்தவர்களுக்கு பரிவட்டம் மூலம் கௌரவம் செய்கிறார்கள் தமிழ்நாட்டில். அனைவரையும் அருகில் கூட்டிக் கொண்டு வருவது இந்த சனாதன தர்மம்.

ப்ரேமம் மூலம் ஆதிபத்யம். அன்பு மூலமாக ஆதிபத்யம். சேவைகள் மூலம் ஆதிபத்யம். வளர்ச்சி மூலம் ஆதிபத்யம், அறிபிஹி ஹிம்ஸா - சத்ருக்களை ஹிம்சை செய்யாமல் நாம் சாதிக்க வேண்டும். Without casualty. மற்றவர்களுக்கு நஷ்டம் இல்லாமல், நமக்கு progress. அடுத்தது அரினாம் ஹிம்சா - சத்ருக்களுக்கு கூட ஹிம்சை வராமல், நமக்கு வெற்றி கிடைக்க வேண்டும். இம்மாதிரி விசாரம், யோசிக்கும் தேசம் இது.

நாம் யாரையும் உதாசீனம் செய்யக் கூடாது. பாரதீய சமாஜம் உதாசீனம் செய்யாத சமாஜம்.

ஒவ்வொரு வீட்டிலும் நெய்வேத்தியம் வைத்து, எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள். இது ஒரு நல்ல காரியம். இம்மாதிரியான கலாசாரம், ஆச்சாரம் நமது தேசவாசிகள் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒரு சிலர் மந்திர பூர்வமாக செய்கிறார்கள். ஒரு சிலர் தியான வழியில் செய்கிறார்கள். எல்லோருக்கும் தபஸ் என்பது முக்கியம். அன்பு, பிரேமை என்பது முக்கியம். கர்த்தவ்யம் முக்கியம். இந்த ஸ்ருஷ்டி வேதாந்த பூமியில் உள்ளது.

இப்பொழுது அனைவரும் சேர்ந்து இருங்கள் என்கிறார்கள். குடும்பத்தில் இருந்து ஆரம்பித்து, நாடு வரை சேர்ந்து இருக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். சங்கராச்சாரியார் அவர்கள் உத்தம வழியில் கூறினார். இது லௌகீக வாழ்க்கைக்கு சம்பந்தமானது. இதற்கும் வாழ்க்கைக்கும், தர்மத்திற்கும் என்ன சம்பந்தம்? தேசம் என்பது பூமி அல்லவா? தர்மம் என்றால் பூஜை, ஹோமம் அல்லவா? இதற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்? தேசம் என்றால் சுகந்தம் போல் இருக்க வேண்டும். அன்புடன் இருக்க வேண்டும். உபநிஷத்தில் சொல்கிறார்கள் - லக்ஷ்மி

கடாக்ஷம் வேண்டுமென்றால், அதற்கு யோக்யதை தேவை. பிரஜைகளை நாம் தர்ம வழியில் தயார் செய்ய வேண்டும். நமது பூமியை பாதுகாக்க தயார் செய்ய வேண்டும். நமது கலாசாரம், சம்ஸ்கிருதி காப்பாற்ற வேண்டுமென்றால், தர்மத்திற்கும், பூமிக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும். தர்மம் சம்பந்தம் இல்லாத பூமியை எப்படி காப்பாற்ற முடியும்? தர்ம வழியில் செல்ல நாம் அனைத்தும் செய்ய வேண்டும். நாம் சாஸ்திர படி, அனைவருக்கும் என்ன நல்லது செய்ய முடியுமோ, அதை செய்ய வேண்டும்.

நாம் எப்படி இருக்க வேண்டும் என்ற பிரச்சாரம் தேவை. விசாலமாக தர்மப் பிரச்சாரம் செய்தால், எல்லாம் சேர்ந்து வளரும்.

தேச நலன் கருதி, தர்மப் பிரச்சாரம் அவசியம் என்ற ஒரு பாவனை, எண்ணம் வர வேண்டும். பரிபாலனம் செய்யும் வர்க்கத்தில் இந்த நல்ல தர்ம எண்ணங்கள் இருக்க வேண்டும். பண்டித வர்க்கத்தில் இந்த எண்ணம் இருக்க வேண்டும். மக்களிடம் இந்த எண்ணங்கள் இருக்க வேண்டும். சனாதன தர்மம் என்ற சிந்தனை இருக்க வேண்டும். அது அனைவருக்கும் ஒன்றே.

பாரதீயனாக இருப்பது மிகப் பெரிய விஷயம். தார்மீகப் படி உத்தமமானது. சமூகமாக ஒற்றுமையுடன் இருப்பது கூட நல்லது என்ற எண்ணங்கள் வர வேண்டும். ஆஸ்திகத்தில் நமது தேசம் நிறைய செல்ல வேண்டியுள்ளது. இந்த தேசத்தில் இருப்பது நமக்கு சௌக்கியமானது. ராஜ்ய நீதியில் நல்ல ஸ்திதி வர வேண்டும். இந்த நாடு வளர்வதற்கு பரஸ்பர ஆதரவு, பரஸ்பர சன்மானம், நட்பு, மைத்ரி பரஸ்பரம் இருக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சி என்பது, தர்மத்தின் வளர்ச்சியையும் கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தர்மத்தால் நல்லது ஏற்ப்படுகிறது. அதற்கு முன் தர்மத்தால் கஷ்டங்கள் வருவதில்லை. தர்மமே, இந்த நாட்டில் முக்கியம். முதன்மை வாய்ந்தது. தர்மம் என்பது வெறும் பணம் தருவது மட்டுமல்ல. நல்லதை பேசுதல், நன்றாகப் பேசுதல், நட்பு வளர வேண்டும். சத்சங்கம் வளர வேண்டும். அனைவரும் சேர்ந்து வளர, நட்பு வளர தர்மப் பிரச்சாரம் அவசியம். பிரஜா, பண்டிதர்கள், பிரபுத்வம் அனைவரும் இதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்

தேச பக்தி, மற்றும் தெய்வ பக்திக்கு நாம் நல்ல சங்கல்பம் செய்வோம். நமது தேசம் நன்றாக இருக்க பிரார்த்தனை, பிரயர்த்தனம் இரண்டும் செய்ய வேண்டும். அனைவரும் வீட்டில் கூட பிரார்த்தனை செய்ய வேண்டும். தர்மம் வளர நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர.**

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம்

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன் **ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து** என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**ஸர்வாண்யேசைதானி ப்ரக்யானஸ்ய நாமதேயானி பவந்தி இதி வாக்யேன தேஹேந்தியாதிஸாக்ஷிரூபம் யத் ப்ரக்யானம் த்வம்பதார்த்தரூபம் நிர்ணீதம், தஏவ ஏஷ ப்ரஹ்ம இத்யாதி வாக்யேன ஜகத்காரணதயா நிர்ணீதம் பரம் ப்ரஹ்ம ந சானயோரீஷதபி பேதோ அஸ்தி இதி ஐதரேய மாஹாவாக்ய ஞ்யான ஸித்தி: நிரந்தரம் பூயாத் ॥ 39**

*பார்க்கும் பொருள் யாவும் ப்ரஞானத்தின் நாமங்களே. இது ஐதரேய உபநிஷத்தின் கூற்று. மேலும் அது கூறும். தேஹ இந்த்ரியங்களின் ஸாக்ஷி ரூபமாய் இருக்கும் ப்ரக்யை த்வம் பதமாகவும், அதுவே இந்த ப்ரம்மம் என்னும் வாக்யத்தால் ஜகத் காரணமான ப்ரம்மத்தை பரம் ப்ரம்மம் என்றும் நிர்ணயம் செய்யும். இந்த இரண்டிற்கும் பேதமில்லை என்னும் ஞானம் எனக்கு நிரந்தரம் ஸித்திக்கட்டும்.*

**யத: சார்வாத்ராவஸ்திதம் ப்ரஞ்யானம் ப்ரஹ்ம அதோ மயி அவஸ்திதம் ப்ரஞ்ச்யானம் ப்ரஹ்ம, ப்ரஞ்யானத்வ அவிசேஷாத் இதி ஐதரேய மஹாவாக்ய உத்தித ஜீவப்ரஹ்ம ஐக்ய ஞான ஸித்தி: நிரந்தரம் பூயாத் ॥ 40 ॥**

*எந்த ப்ரக்ஞானம் எல்லா இடத்திலும் உள்ளதோ, அதுவே என்னிடத்திலும் உள்ளது. ப்ரஞானத்தை உணர்வதில் எந்த பேதமுமில்லை. இந்த ஜீவ ப்ரம்ம ஐக்ய ஞ்யான ஸித்தி எனக்கு நிரந்தரம் இருக்கட்டும்.*

**ஆத்மஸன்னிதௌவித்யமானத்வேன ஜடரூபஸ்யாபி தேஹேந்த்ரியாதே: சேதனத்வேன பாஸமானத்வாத் ஆத்மா சித்ரூப இதி சிதானுபவ ஸித்தி; ஸம்யக் பூயாத் ॥ 41 ॥**

*ஜட ரூபமாயுள்ள தேஹ இந்த்ரியாதிகள் சேதனமான ஆத்ம வஸ்துவால் ப்ரகாசிக்கப்படுகின்றன. இந்த சேதன உணர்வு அனுபவ ஸித்தியாகட்டும்.*

*(தொடரும்)*

# ஸர்வம் பிரம்மமயம்

கலைமகள் நடராஜன்

உலக நாடுகளுக்கெல்லாம் ஆன்மிகத்துக்கு வழிகாட்டியாக நிற்பது நம் பாரத பூமி. ஆன்மிகம் என்றால் என்ன? ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சிதான் ஆன்மிகம்.

ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சி; ஆன்மா என்றால் ? ஆன்மா என்பது தான் ஆத்மா. 'ஆத்மா ச பிரம்ம - என்கிறது தைத்திரீய உபநிஷத். பரம் பிரம்ம-பரம்பொருள் தான் ஆன்மா.

வேதாந்தம் என்பதுதான் உபநிஷத்து. வேதம் இரண்டு பிரிவுகளை உடையது. கர்ம காண்டம், ஞானகாண்டம். கர்மாக்களைச் செய்து ஸகல செல்வங்களையும் (பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வது என்பார்களே ! அப்படி எல்லாச் செல்வங்களையும்) பெற்று இவ்வுலகிலும் விண்ணிலும் சுபபோகங்களை அநுபவிப்பதற்கான வழியைப் போதிப்பது கர்மகாண்டம்.

குழந்தை பிறந்தால் கொண்டாடுகிறோம். சந்தோஷமாக இருக்கிறது. பிறப்பது என்பது ஆதி - ஆரம்பம். ஆதி என்னும் போதே அந்தம் - இறுதி ஒன்று உண்டு என்று தெரிகிறது. இறுதிதான் இறப்பது. இறப்பது என்றால் துக்கம். எனவே எது உனக்கு ஆரம்பத்தில் சந்தோஷத்தைக் கொடுக்கிறதோ, அதுவே இறுதியில் உனக்கு துக்கத்துக்குக் காரணமாகி விடுகிறது. எனவே தான் உலகியல் வாழ்வு நிலையற்றது. துக்கத்தையும் தரும் என்கிறோம். சுகம் என்பது வந்தால் துக்கமும் ஒருநாள் நிச்சயம் உண்டு.

ஆகவே நிலையற்ற இந்த வாழ்வையே நம்பிக் கொண்டிருக்காதே! நிலையான ஒன்றைப் பற்றிக் கொண்டு விட்டால் உனக்கு துக்கம் வராது. நிலையான ஒன்று அன்புமயமானது, ஆனந்த வடிவானது. எனவே அதைப் பற்றிக்கொள் என்று போதிப்பதுதான் ஞானகாண்டம்.

அந்த நிலையான ஒன்று தான் ஆன்மா! ஆன்மா, ஆத்மா, பரமாத்மா, பரம்பொருள் என்றெல்லாம் பல பெயரிட்டு அதனை அழைக்கிறோம். ஆன்மாவைத் தேடி நீ எங்கும் அலைய வேண்டாம். அது உன்னுள்ளேயே இருக்கிறது என்கிறார் கண்ணபிரான்.

*ஈச்வர:* ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே (அ)ர்ஜூனே திஷ்டதி. எல்லாப் பிராணிகளிடத்திலும் இதயத்திலே உயிராக-ஒளியாக இறைவன் இருக்கிறான்- கீதை.

**அஸௌ ஆதித்யோ ப்ரஹ்ம ப்ரஹ்மைவாஹமஸ்மி'** - என்கிறது வேதம்.

*1.* கதை கேட்பது, *2.* நாமாவைச் சொல்வது (பாடுவது), *3.* இறைவனையே சதா நினைப்பது, *4.* திருவடியைச் சேவிப்பது, *5.* அர்ச்சிப்பது (பூஜை செய்வது), *6.* வணங்குவது, *7.* பணிவிடை செய்வது, *8.*தோழமை (நட்பு கொள்வது), *9.* சரணாகதி அடைவது என்று ஒன்பது வகை பக்தி.

பக்தி மார்க்கம் ஆரம்ப நிலை; துவைதத்தைப் போதிப்பது. ஜீவகோடிகள் பரமனிடம் பக்தி செலுத்தி அவனருளாலே மோட்சத்தை அடைய வேண்டும் என்று கூறுவது துவைதம். அதாவது ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்பது அவர்களின் ஸித்தாந்தம்.

உபாசனா மார்க்கம் நடுநிலை. விசிஷ்டாத்வைதத்தைப் போதிப்பது. ஜீவகோடிகள் அனைவரும் சகல கல்யாண குணங்கள் நிறைந்த ஸ்ரீமந் நாராயணனை உபாசித்து அவனுடைய திருவடித் தாமரைகளை அடைவது; பிரபத்தி-சரணாகதி செய்து பகவானை அடைவது என்பது. ஜீவன் வேறு, பரமன் வேறுதான். ஆனால் உபாசனை செய்து பகவானின் அருளாலே அவனுடைய பாதாரவிந்தங்களை அடைந்து விடுகிறான் என்பது அவர்களுடைய ஸித்தாந்தம்.

ஞானமார்க்கம் என்பது மூன்றாவது நிலை. மேல்நிலை என்றும் கூறலாம். பக்தி மார்க்கம் முதல்படி, உபாசனா மார்க்கம் இரண்டாவது படி. இரண்டுக்கும் அப்பாற்பட்டதுதான் அத்வைத நிலை - ஞானிநிலை. அதுதான் பிரம்மசாட்சாத்காரம் என்பது. அந்த அநுபவம் வந்த பிறகு, ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்ற பேதம் தோன்றாது. தத்துவமஸி, ப்ரஹ்மைவாஹம் போன்ற மகாவாக்கியங்கள் இந்த நிலையையே எடுத்துக் கூறுகின்றன.

அத்வைதஞானி - பிரம்மஞானி, இந்த உலகை எப்படிப் பார்ப்பான்? நாம் பார்க்கும் இந்த உலகம் அந்த ஞானிக்கு எப்படித் தோன்றும்?

நவராத்திரியிலே கொலு வைத்திருக்கிறார்கள். மேல் மேல் வரிசையிலே கயிலையங்கிரியிலே காளை மேலே பார்வதி-பரமேசுவரர்கள் வீற்றிருக்கிறார்கள்.

அதே வரிசையில் நடுவில் வைகுண்டடத்தில் சேஷசயனத்தில் திருமால் பள்ளிகொண்டு எழுந்தருளியிருக்கிறார். வக்ஷஸ் ஸ்தலத்தில் தாயார். பக்கத்திலேயே ஸத்யலோகத்தில் பிரம்மா - சரஸ்வதி. அடுத்த வரிசையிலே தசாவதாரமூர்த்திகள். அதற்கடுத்த படியில் ஆலமரத்தடியிலே மவுனமே உருவாய் அமர்ந்து சனகாதிகளுக்கு உபதேசம் செய்யும் தக்ஷிணாமூர்த்தி. இப்படி வரிசை வரிசையாகப் பொம்மைகள். கடைசிப் படியில் செட்டியார் மளிகைக் கடை வைத்திருக்கிறார். அதன் ஒரு பக்கத்தில் வெண்டைக்காய், பாகற்காய், கத்திரிக்காய், பச்சை மிளகாய் தத்ரூபமாக இருக்கின்றன.

ஸ்கூல் சென்றுவிட்டு வீடு திரும்பும் இரண்டு மாணவர்கள். ஒருத்தன் மற்றவனிடம் கூறுகிறான்: ‘எங்கள் வீட்டிலே கொலு வைத்திருக்கிறது. மிகவும் அழகாக இருக்கும். நீ வந்து பார்த்துவிட்டுப் போ !’ என்றுட அழைத்தான். இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். வீட்டுக்காரப் பையன், ‘நீ இங்கேயே இரு, உள்ளே சென்று பையை வைத்துவிட்டு வருகிறேன்’ என்று சொல்லிப் போனான்.

அதற்குள் இந்தப் பையனுக்கு அவசரம். 'நாம்தான் உள்ளே போய்ப் பார்ப்போமோ ! அவன் இல்லாவிட்டால் என்ன!’ என்று கொலு அறையில் நுழைந்தான். நுழைந்ததுமே உள்ளே இருபுறமும் இரண்டு அல்சேஷன் நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு பயங்கரமாக மேலே பாய்ந்து விடும் போல நின்றிருந்தது. அதைக் கண்டதுமே அலறிப் புடைத்துக் கொண்டு வியர்க்க வியர்க்க ஓடி வந்தான். இதைக் கேட்டுக் கொண்டே வந்த வீட்டுக்காரப் பையனுக்கு ஒரே திகைப்பு. விஷயத்தைக் கேட்டறிந்ததும் அந்தப் பையனைச் சமாதானப் படுத்தி, 'அது பொய் நாய். உண்மையில் மண்ணாலான பொம்மைதான் அது’ என்று சத்தியத்தைச் சொல்லி, அவனுடைய பயத்தைத் தெளிய வைத்து அருகில் அழைத்துப் போய்த் தொட்டுக் காண்பித்தான். பிறகு ஒருவாறு சமாதானம் அடைந்தான் அந்தப் பையன்.

தத்துவம் தெரிந்த உண்மையை அறிந்த பையனுக்குப் பயம் இல்லை. அவன் பிறருக்கும் உண்மையை விளக்கி அபயம் (பயமில்லாத் தன்மையை) அளிக்கிறான். பயத்துக்குக் காரணம், உண்மை தெரியாமலிருப்பது. அஞ்ஞானம். அஞ்ஞானம் விலகினால் போதும், பயமும் போய்விடும்.

கெட்டிக்காரப் பையனுக்குத் தத்துவம் தெரியும். எல்லாம் மண்ணால் ஆனது. மண்தான் உண்மை. சிங்கம், கரடி, நாய், பூனை எல்லாம் பொய்த் தோற்றந்தான் என்பதால், அவனுக்குப் பயமில்லை. தான் பயப்படாதது மட்டுமல்ல, ற்றவனுக்கும் தத்துவத்தைக் கூறி அபயம் அளித்தான்.

அதுபோல் தத்துவஞானியும் - பிரம்மஞானியும் நாம் பார்ப்பது போல்தான் இந்த உலகைப் பார்ப்பார். ஆனால் எல்லாம் பரம்பொருளால் உண்டானதுதான். தோற்றத்தால் வேறு வேறு ஆனாலும் மூலப் பொருள் ஒன்றுதான் என்ற தத்துவம் தெரியுமானதால் எதைக் கண்டும் பயமில்லை, அபயந்தான் அவருக்கு.

ஒரு கதை மூலம் விளக்கியிருப்பது கேட்பதற்கு அழகாக இருக்கிறது. ஆனால் இந்த நிலை சாத்தியமா? நடைமுறைக்கு ஒத்துவருமா? அப்படி யாரேனும் ஞானியர் இருந்திருக்கிறார்களா என்பது கேள்வி.

பரப்ரம்மத்துக்கு-பரம் பொருளுக்கு லட்சணம் கூறும் போது கால பரிச்சேதம். தேச பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் இந்த மூன்றும் இல்லாதது என்று கூறுகிறோம். பரிச்சேதம் என்றால் எல்லை- அளவுக்குட்பட்டது. பொருள் இந்த இடத்தில் இருக்கிறது. பூமண்டலத்தில் இருக்கிறது. சந்திர மண்டலத்தில் இல்லை என்றால், அது தேச பரிச்சேதம்-அளவுக்குட்பட்டது என்பது பொருள்.

இந்த அடையாறு ஆலமரம், அல்லது காஞ்சி ஏகாம்ரநாதர் கோயிலிலுள்ள மாமரம் ஆயிர வருஷமாக இருக்கிறது என்றால், அதற்கு முன்பு இல்லை என்று பொருள். எனவே அது கால அளவுக்குட்பட்டது.

இனிப்பு போன்ற ஒரு குணம்-பொருள் கனியில் இருக்கிறது, காயில் இல்லை; நீரில் இருக்கிறது, நெருப்பில் இல்லையென்றால், அதுவும் ஓர் எல்லைக்குட்பட்டது என்று பொருள். இது வஸ்து பரிச்சேதம்.

'தபஸா ப்ரஹ்ம விஜிக்ஞாஸஸ்வ' என்கிறது வேதம். தவம் செய்யச் செய்ய பிரம்மம், பரம்பொருள் விளங்கும் என்கிறது.

துறவறம் என்பது, தவம் இயற்றி ஞான நிலையை-பிரம்மத்தைக் கண்டறிவதற்காகவே (ஸாக்ஷாத்காரம்) ஏற்பட்டது. இங்கே மூன்று நிலைகள் உள்ளன.

**முதல் நிலை - ஞானி :** தவம் இயற்ற இயற்ற அவன் ஞான நிலையை அடைகிறான். அவனை யோகி என்றோ ஞானி என்றோ அழைப்பர்.

அவருக்கு யோகிப் பிரத்யட்சம் என்ற ஆற்றல் உண்டு. அதாவது இருந்த இடத்தில் இருந்து கொண்டே இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் (பூ மண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம் இது போன்ற பல மண்டலங்கள் கொண்ட பிரம்மாண்டம் அனைத்திலும் உள்ளவற்றை) நாம் நம் கையில் உள்ள பொருளைப் பார்ப்பது போல் தெளிவாகப் பார்க்கலாம்.

அதனால்தான் ஒவ்வொரு ரிஷியும் அவரவர் கண்டு கூறியுள்ள வேத மந்திரங்களில் வேறு அண்டங்களைப் பற்றிய வர்ணனைகள் எல்லாம் காணக் கிடைக்கின்றன. இவர்களுக்கு. மந்த்ர த்ரஷ்டாக்கள் என்று பெயர் விளங்குகிறது. இவர்கள் தேச பரிச்சேதத்தைக் கடந்தவர்கள்.

**இரண்டாவது நிலை-** த்ரிகால ஞானி: இந்த ஞானிக்கு மூன்று காலங்களிலும், அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முன்பு நடந்தது, அல்லது சென்ற யுகத்தில் என்ன நடந்தது; ஆயிரம் வருஷம் கழித்து அல்லது வரப்போகும் யுகத்தில் என்ன நடக்கப் போகிறது என்றெல்லாம் கண்டறியும் சக்தி உண்டு என்று தெரிகிறது. இதிலிருந்து மற்றோர் உண்மையும் விளங்குகிறது. இதற்குமுன் முதல் நிலை ஞானிக்கு இந்த ஆற்றல் இல்லை. அவருடைய வாழ்நாளில் என்ன நடக்கிறது என்பதை மட்டும் அவரால் கண்டறிய முடியும் என்ற உண்மை விளங்குகிறது. கால பரிச்சேதத்தைக் கடந்தவர் த்ரிகால ஞானி.

**மூன்றாவது நிலை-பிரம்ம ஞானி :** இந்த ஞானிக்கு முதல் நிலை, இரண்டாவது நிலை ஞானிபோல நான் நேரில் பார்க்கிறேன், முக்காலத்தையும் தெரிந்து கொள்கிறேன் என்ற 'நான்' என்ற மனோபாவமே இருக்காது. பின் எத்தகைய மனோபாவம் அவருடையது? நானாக இருப்பதும் நீயாக இருப்பதும், மரமாக இருப்பதும் மட்டையாக இருப்பதும் கல்லாக இருப்பதும் மண்ணாக இருப்பதும், எல்லாமாக இருப்பதும் ஒன்றுதான் அந்தப் பரம்பொருள் தான் என்ற ஸர்வாத்ம பாவம் உண்டாகிவிடும்.

சதாசிவ பிரம்மேந்திரர், '**ஸர்வம் பிரம்மமயம், ரே ரே ஸர்வம் பிரம்ம மயம்**' என்கிறாரே, அவரே இந்தப் பிரம்மஞான நிலைக்குச் சான்று.

கொலு பொம்மைகளைத் தோற்றத்திலே வேறு வேறாகப் பார்த்தாலும் எல்லாவற்றுக்கும் மூலப்பொருள் மண்தான் 'அதுதான் சத்தியம்'. **ம்ருத்திகா இத்யேவ ஸத்யம்** என்பது போல் இந்த பிரபஞ்சம் தோற்றத்திலே வேறு வேறாகத் தோன்றினாலும் அதெல்லாம்

பொய். தோன்றும் இந்த உலகம் பொய். **ஜகன் மித்யா-ப்ரஹ்மைவ ஸத்யம்.** எல்லாவற்றுக்கும் மூலப்பொருளான பரம்பொருளே உண்மை. இந்த அநுபவம் வந்த தத்துவ ஞானிக்குப் பயமே ஏற்படாது. அபயம்தான் என்கிறது உபநிஷத். அதுவே வேதத்தின்சாரம் !

**'அத்வைதம் ந விருத்யதே'** அத்வைதக் கொள்கைக்கு வேறு எந்தக் கொள்கையும் துவைதமோ, விசிஷ்டாத்வைதமோ விரோதமானது அல்ல. முரணானது அல்ல. அத்வைத நிலையை எட்டுவதற்கு அவையெல்லாம் படிகள். மேல்படிப்புப் படித்தவன் ஆரம்பப் பள்ளியையோ, ஹைஸ்கூல் படிப்பையோ ஏற்க மறுப்பானா ? அது போல்தான்.

இப்போது அத்வைதி என்று கூறிக் கொள்பவர்கள் எல்லாம் 'நாங்கள் மேல் படிப்புப் படித்தவர்கள். அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்' என்று அகந்தை கொள்வதற்கு ஏதுமில்லை. உலகியல் வாழ்க்கையில் உழன்று வரும் அவர்களும் நடைமுறையில் 'துவைதிகள் தாம்!' நடைமுறையில் அனைவரும் சமமே. அத்வைத அநுபவம் வந்த ஞானியும் **'சமதர்சீ'**- எல்லாரையும் எல்லாவற்றையும் சமமாக, அன்பு மயமாகப் பார்க்கக் கூடியவர். எனவே இங்கே ஏற்றத் தாழ்வுக்கே இடமில்லை.


இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

# புரட்டாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *18-09-2022* | ஞாயிறு | வ்யதீபாத மஹாளயம். மத்யாஷ்டமி |
| *19-09-2022* | திங்கள் | அவிதவாநவமி |
| *21-09-2022* | புதன் | ஏகாதசி |
| *22-09-2022* | வியாழன் | த்வாதசி, ஸன்யஸ்த மஹாளயம் |
| *23-09-2022* | வெள்ளி | ப்ரதோஷ பூஜை |
| *24-09-2022* | சனி | சஸ்த்ரஹத மஹாளயம் |
| *25-09-2022* | ஞாயிறு | மஹாளய அமாவாசை |
| *26-09-2022* | திங்கள் | சாரதா நவராத்திரி ஆரம்பம் |
| *28-09-2022* | வியாழன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *30-09-2022* | வெள்ளி | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| *02-10-2022* | ஞாயிறு | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர், சரஸ்வதி ஆவாஹனம் |
| *04-10-2022* | செவ்வாய் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம், ஸரஸ்வதி பூஜை |
| *05-10-2022* | புதன் | விஜயதசமி |
| *06-10-2022* | வியாழன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம், ஏகாதசி |
| *07-10-2022* | வெள்ளி | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| *09-10-2022* | ஞாயிறு | பௌர்ணமி பூஜா |
| *11-10-2022* | செவ்வாய் | பௌமாஸ்வினி |
| *23-09-2022; 30-09-2022; 07-10-2022; 14-10-2022* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸ்ரீமத் தேவி பாகவதம்

பி. ஆர். கண்ணன்



### கௌதமர் கொடுத்த சாபம்

ஒரு சமயம் 12 வருஷம் தொடர்ந்து மழையின்றி, கடும் வரட்சியினால் எல்லா ஜீவராசிகளும் பெரும் துன்பத்திற்காளாயினர். பலர் மாண்டனர். கௌதம மஹர்ஷி காயத்ரிதேவியின் உபாஸகரானதால், அவருடைய ஆஸ்ரமத்தில் சுபீக்ஷம் நிலவிற்று. ப்ராம்மணர்கள் பலரும் குடும்பத்துடன் அங்கு வந்து சேர்ந்தனர். அதேபோல் பலரும் அந்த ஆஸ்ரமத்தை அடைந்தனர். கௌதமர் எல்லோரையும் இன்முகத்துடன் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார். அபயப்ரதானம் அருளினார். என் புண்யவிசேஷத்தினால் தங்களைப்போன்ற தபஸ்விகள் வருகை தந்து என் ஆஸ்ரமத்தைப் புனிதமாக்குகிறீர்கள் என்று கூறினார். கௌதமர் காயத்ரிதேவியை ஸ்தோத்ரம் செய்து, எல்லோருக்கும் உணவிற்காகப் ப்ரார்த்தித்தார். தேவி ஒரு பூர்ணபாத்ரம் தந்து, அதிலிருந்து குறைவில்லாமல் எல்லா பொருட்களும் கிடைக்கும் என்று அருளினாள். அவ்வாறே அதிலிருந்து எல்லோருக்கும் வெகு ஸம்ருத்தியாக அன்னம் மட்டுமில்லாமல், யாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரி, வஸ்த்ரம், ஆபரணங்கள் கூட கிடைத்தன. அங்கு பெண்கள் தேவலோக மாதரைப்போல ஆபரணங்கள் அணிந்திருந்தனர். நித்யோத்ஸவமாக இருந்தது. பலவித யக்ஞங்கள் தொடர்ந்து நடந்ததில், தேவதைகளின் சந்தோஷத்திற்கு அளவில்லை. இந்த்ர சபையில் கௌதம ரிஷியின் யசோகானம் தொடர்ந்தது. 12 வருஷம் இவ்வாறு அதிதி ஸத்காரம் தொடர்ந்து கௌதமரின் ஆஸ்ரமத்தில் நடந்து கொண்டிருக்கையில், நாரதர் ஒரு நாள் வந்து இந்த்ரசபையில் மஹரிஷியின் புகழ் ஓங்கி ஒலிப்பதைச் சொல்லி சந்தோஷப்படுவதற்காகவே வந்ததாகச் சொல்லி, மஹர்ஷியின் ஆஸ்ரமத்தில் இருந்த

காயத்ரிதேவியின் ப்ரதிமையை வழிபட்டு விடைபெற்றார். ஆஸ்ரமத்திலிருந்த ப்ராம்மணர்களுக்கு கௌதமர் பேரில் பொறாமையும் த்வேஷமும் திடீரென உண்டாகின. இதற்கிடையில் எங்கும் மழை பெய்து சுபீக்ஷம் ஏற்பட்டது. ப்ராம்மணர்கள் கௌதமரின் அவப்பெயருக்காக ஒரு நோஞ்சான் பசுவை மாயையினால் ஸ்ருஷ்டி செய்து, அவருடைய யக்ஞசாலையின் வாயிலில் அவர் வரும்போது குறுக்கே வருமாறு செய்தார்கள். கௌதமர் ஹூம் என்று சப்தமிட்டவுடனே, மாடு கீழே விழுந்து ப்ராணனை விட்டது. கௌதமருக்கு யக்ஞத்தில் இருந்தபோதே ஸமாதி நிலையில் உண்மையை அறிந்தார். யக்ஞத்தை முடித்து யக்ஞசாலையிலிருந்து வெளிவந்து, ருத்ரகோபத்துடன் அங்கிருந்த ப்ராம்மணர்களக் கடுமையாக சபித்தார்.

ப்ராம்மணப்பதர்களே, வேதங்களின் தாயான காயத்ரிதேவியிடமும், தேவியின் த்யானம், மந்த்ரஜபம் எல்லாவற்றிலும் உங்களுக்கு எப்போதும் விரோதபாவம் ஏற்படட்டும். **வேதமாதரி காயத்ர்யாம் தத்த்யாநே தந்மநோர்ஜபே । பவதாநுந்முகா யூயம் ஸர்வதா ப்ராஹ்மணாதமா: ।।** வேதங்கள், யக்ஞங்கள், சிவன், சிவமந்த்ரங்கள், தேவி, தேவி கதைகள், மந்த்ரங்கள், கர்மாக்கள்,உத்ஸவங்கள், நாமஸங்கீர்த்தனம், ருத்ராக்ஷம், விபூதி, வில்வம், ஸ்ரௌத, ஸ்மார்த்த ஸதாசாரம், ஞானமார்க்கம், அத்வைத ஞானஸாதனை, நித்யகர்மாக்கள், அக்னிஹோத்ராதிகள், அத்யயனம், ப்ரவசனம், தான‘க்கள், ஸ்ராத்தங்கள், ப்ராயஸ்சித்தங்கள் முதலிய எல்லாவற்றிலும் ஸ்ரத்தையில்லாமல் போகட்டும். பாகண்டம், வேதத்தை விற்பது முதலிய பாப கார்யங்களில் ஈடுபாடு அதிகமாகட்டும். உங்கள் ஸந்ததியினரும் இந்த சாபத்தால் தஹிக்கப்படட்டும். **கிம் மயா பஹுநோக்தேந மூலப்ரக்ருதிரீஸ்வரீ । காயத்ரீ பரமா பூயாத் யுஷ்மாஸு கலு கோபிதா ।। அந்தகூபாதிகுண்டேஷு யுஷ்மாகம் ஸ்யாத் ஸதா ஸ்திதி ।।** அதிகம் சொல்வானேன், மூலப்ரக்ருதி, ஈஸ்வரி, பராவான காயத்ரிதேவி உங்களிடம் கோபிக்கட்டும். நீங்கள் அந்தகூபம் முதலிய நரகங்களில் எப்போதும் வசிக்கக் கடவீர், என்று ருத்ரகோபத்துடன் சபித்துவிட்டு காயத்ரிதேவியைச் சரணடைந்தார். தேவி புன்னகையுடன் மஹரிஷியிடம், பாம்புக்கு வார்த்த பால் விஷமாகத்தானே ஆகும், இது கர்மாவின் கதி, நீ சாந்தியடைவாயாக என்று அனுக்ரகித்தாள்.

ப்ராம்மணர்கள் வேதம், காயத்ரி எல்லாவற்றையும் மறந்தனர். பச்சாத்தாபப்பட்டு, முனிவரிடம் க்ஷமாப்ரார்த்தனை செய்தனர். கௌதமர் க்ருஷ்ணாவதாரம் வரை

கும்பீபாகநரகத்தில் இருந்துவிட்டு, கலி பிறந்தபிறகு மனிதஜன்மா கிடைக்கும் என்றும், காயத்ரிதேவியை உபாஸிப்பதே சாபவிமோசனம் என்றும் அருளினார். வ்யாஸரும் இந்த கட்டத்தில் காயத்ரிதேவியின் உபாஸனையே ப்ராம்மணர்களுக்கு ஸ்ரேயஸைக் கொடுக்கும்; காயத்ரி மந்த்ர உபாஸனை தினமும் மூன்றுவேளை விதிக்கப்பட்டிருக்கையில், வேறு மந்த்ரங்கள் அவர்களுக்கு எதற்கு என்று அருள்கிறார்.

**மணித்வீப வர்ணனை**

எல்லா லோகங்களுக்கும் மேலே குடையாக ஸர்வலோகம் என்ற பெயரில் மணித்வீபம் அம்ருதஸாகரத்தின் மத்தியில் வெகு ஸ்ரேஷ்டமாக, சுந்தரமாக, ஸம்ஸாரஸாகரத்தின் வெம்மையைப் போக்கும்விதமாக விளங்குகிறது. **சத்ரீபூதம் த்ரிஜகதோ பவஸந்தாபநாஸகம் । சாயாபூதம் ததேவாஸ்தி ப்ரஹ்மாண்டாநாம் து ஸத்தம ॥** அதுவே ப்ரம்மாண்டங்களுக்கு நிழலாகத் திகழ்கிறது. அம்ருதஸாகரத்தில் அழகான அலைகள், பலவிதமான படகுகள் ஸஞ்சரிக்கின்றன.

மணித்வீபத்தின் நான்கு பக்கக்கரைகளிலும் ரத்னமயமான மரங்கள் ப்ரகாசிக்கின்றன. வடக்கு பக்கத்திலிருந்து ப்ரவேசம். மொத்தம் 24 நிலைகளைத்தாண்டி, தேவியின் தர்சனம். 24 நிலைகள் காயத்ரி மந்த்ரத்தின் 24 அக்ஷரங்களைப்போல அமைந்து தேவியிடம் கொண்டுசேர்க்கின்றன.

**1. இரும்பு ப்ராகாரம் :** 7 யோஜனை விஸ்தீர்ணம்; பல ரக்ஷகர்கள். தர்சனார்த்திகளுடைய கணங்கள், வாகனங்கள் இங்கு நிறுத்தப்பட்டுள்ளன. விமானங்கள், குதிரைகள், ஜனங்களின் சத்தம் மிகுந்திருக்கின்றது. நல்ல ஜலமுள்ள குளங்கள், ரத்னமயமான மரங்கள் இங்கு உள்ளன.

**2. எஃகு ப்ராகாரம்:** மிகுந்த ப்ரகாசமளிக்கும் பலவித மரங்கள், வில்வம், துலஸி, மல்லிகை வனங்கள், மரங்களில் பக்ஷிகள், நதிகளில் ரஸத்தின் ப்ரவாகம், மான்கள், மயில்கள் என்று கொள்ளை அழகு.

**3. செம்பு ப்ராகாரம்:** இந்த இரு ப்ராகாரங்களின் மத்தியில் கல்பவ்ருக்ஷவனம்; அவற்றில் புஷ்பமும், இலையும் தங்கம் போன்று, விதையும், பழமும் ரத்னம் போன்று. வாசனை மிகுந்த இடம். ரக்ஷகர் வஸந்தருது - வஸந்த புஷ்ப சிம்மாசனம் மேல்; மதுஸ்ரீ, மாதவஸ்ரீ (சித்ரை, வைகாசி மாதங்கள்) பத்னிகள்; கந்தர்வர்கள் பத்னிகளுடன் இருக்கிறார்கள்.

(தொடரும்)

# சாணக்ய ஸுபாஷிதம்

## நாமே நமக்கு

**ஸ்வயம் கரோதி ஆத்மா ஸ்வயம் தத்பலம் அஸ்னுதே**

**ஸ்வயம் ப்ரமதி ஸம்ஸாரே ஸ்வயம் தஸ்மாத் விமுச்யதே ॥ 26 ॥**

*தானே கர்மாவை செய்கிறான், தானே அதற்குப் பலனை அனுபவிக்கிறான், தானே ஸம்சாரத்தில் சுழல்கிறான், இறுதியில் தானே மோக்ஷமடைகிறான். ‘‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’’ என்னும் கணியன் பூங்குன்றனாரின் கூற்று உற்று நோக்கத்தகுந்தது.*

## யார் இறந்தவர்?

**ஜீவந்தம் ம்ருதவன்மன்யே தேஹினம் தர்ம வர்ஜிதம்**

**ம்ருதோ தர்மேண ஸம்யுக்தோ தீர்கஜீவி ந ஸம்சய: ॥ 27 ॥**

*அறமில்லா மனிதன் இறந்தவனே. இறப்பினும் அறவான் தீர்க்க ஜீவியே.*

## இதுவே ஸ்வர்கம்

**ஸ்வர்கஸ்திதானாம்மிஹ ஜீவலோகே சத்வாரி சின்னானி வஸந்தி தேஹே**

**தானபரஸங்கோ மதுரா வாணி தேவார்ச்சனம் ப்ராஹ்மணதர்ப்பணஞ்ச ॥ 28**

*இவ்வுலகில் ஸ்வர்கத்திலிருந்து வந்தவர்கள் நான்கு சின்னங்களைக் கொண்டிருப்பர். தானம், இன்சொல், தேவ பூஜை, ப்ராம்மண ஸேவை.*

## இதுவே நரகம்

**அத்யந்த கோப; கடுகா ச வாணி தரித்ரதா ச ஸ்வஜனேஷு வைரம்**

**நீசப்ரஸங்க: குலஹீன ஸேவா சிஹ்னானி தேஹே நரகஸ்திதானம் ॥ 29 ॥**

*எப்போதும் சிடுசிடுத் தன்மை, வன்சொல், ஏழ்மை, சுற்றத்தாருடன் விரோதம், சிற்றினச் சேர்க்கை, குலத்திற்கு கேடு செய்தல் இவை நரகத்திலிருப்பவர்களின் சின்னங்கள்.*

## தனித்வம்

**ஆஹார நித்ரா பய மைதுனானி ஸாமானி சைதானி ந்ருணாம் பஸுனாம்**

**ஞானம் நராணாமதிகோ விசேஷோ ஞானேன ஹீனா: பசுபி: ஸமானா: ॥ 30**

*உணவு உறக்கம் அச்சம் ஸம்போகம் மக்களுக்கும் மிருகங்களுக்கும் ஸமமே. மனிதனுக்கு ஞானம் அதிகமுள்ளது. ஞானமில்லாதவன் ம்ருகத்திற்குச் சமம்.*

### ம்ருகத்தன்மை

**யேஷாம் ந வித்யா தபோ ந தானம் ந சாபி சீலம் ந குணோ ந தர்ம:**
**தே ம்ருத்யுலோகே புவி பார பூதா மனுஷ்யரூபேண ம்ருகாச்சரந்தி ॥ 31**

*யாருக்கு கல்வி, தவம், தானம், சீலம் அறம், குணம் இல்லையோ புவிக்குப் பாரமே அவர்கள் மனித ரூபத்தில் சஞ்சரிக்கும் ம்ருகங்கள்.*

### எல்லாம் ஸத்யம்

**ஸத்யேன தார்யதே ப்ருத்வீ ஸத்யேன தபதி ரவி;**
**ஸத்யேன வாதி வாயுச்ச ஸர்வம் ஸத்யே ப்ரதிஷ்டிதம் ॥ 32**

*உலகம் ஸத்யத்தினால் தாங்கப்படும், ஆதவன் ஸத்யத்தினால் தப்பிப்பான். ஸத்யத்தினால் பவனம் வீசும், அனைத்தும் ஸத்யத்திலேயே அடக்கம்.*

### வாழ்க்கைப் படகு

**தன்யா த்விஜமயீ நௌகா விபரீதா பவார்ணவே**
**தரந்தி அதோகதா ஸர்வே உபரிஸ்தா;பதந்தியத: ॥ 33**

*பவ ஸாகரத்தில் த்விஜனாயிருக்கும் வாழ்க்கைப் படகு கீழே இருப்பவர் ஸாகரத்தைக் கடக்க, மேலேயிருப்பவர் மூழ்குவர். (அதோகத: வணக்கமுடையவர், உபரிஸ்தா: கர்வம் கொண்டவர்கள் என்று பொருள்).*

### நற்செயல் மேற்பாலவை

**முஹூர்தமபி ஜீவேச்ச நர: சுக்லேன கர்மணா**
**ந கல்பமபி துஷ்டேன லோகத்வய விரோதினா ॥ 34**

*க்ஷண நேரம் நற் செயல் செய்து வாழ்தல் வரம். தீச்செயலால் விண்ணுக்கும் மண்ணுக்கும் தீங்கு செய்து கல்பகோடி காலமிருந்து என்ன பயன்?*

### சிறந்தவை

**தத்போஜனம் யத் த்விஜ புக்த ஸேஷம் தத் ஸௌஹ்ருதம் யத் க்ரியதே பரஸ்மின்**
**ஸா ப்ரக்யதா யா ந கரோதி பாபம் தம்பம் வினா யத் க்ரியதே ஸ தர்ம: ॥ 35**

*அந்தணர் உண்ட ஸேஷம்தான் போஜனம். எது அன்புடன் பிறருக்குத் தரப்படுகிறதோ அதுவே நட்பு, பாபம் இல்லாத செயலே செயல், தம்பமில்லாமல் செய்யப்படும் கார்யம் தர்மம்.*

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி



17.07.22 முதல் 24.07.22 - ப்ரம்ம ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி அண்ணா அவர்களால் பாகவத ஸப்தாகம் நடைபெற்றது. தொடர்ந்து 25.07.22 முதல் 27.07.22 வரை மூன்று நாட்கள் ப்ரம்ம ஸ்ரீ ரங்கன் அவர்களால் கோதாவரி மகாத்மியம் பற்றி உபன்யாசம் நடைபெற்றது.

22.07.22 முதல் 24.07.22 வரை நடைபெற்ற அக்னிஹோத்ர ஸதஸில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்னாடகா, மஹாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் பிரதேசங்களிலிருந்து 120க்கும் அதிகமான அக்னி ஹோத்ரிகள் பங்கேற்றார்கள்.

ஆந்திரா ப்ரதேஷ் உயர்நீதிமனற்த்தின் தலைமை நீதியரசர் மேதகு. ஸ்ரீ ப்ரசாந்த குமார் மிஸ்ரா, ஸ்ரீ தர்மாரெட்டி, EO TTD. ஏனாம் ப்ரதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ கிருஷ்ண ராவ் முதலியோர் ஸதஸுனுடைய நடவடிக்கைகளை பார்வையிட்டார்கள். ப்ரம்ம ஸ்ரீ அக்னிஹோத்ரி ஜம்புநாத ஸலக்ஷண கனபாடிகளுக்கு ''ஷடங்க வேத ப்ரசார ரத்னம்'' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

*29.7.22 அன்று ஒரு நோக்கு நிறை நிரல் (*Orientation Programme*) அறநிலையத் துறை செயல் அலுவலர்கள் (*of all grades*) ஆய்வாளர்கள மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழச்சி நடைபெற்றது. மதியம் நடந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹபாஷணம் செய்வித்தார்கள். சாகண்டி ஸ்ரீ கோடீஸ்வர கோவில் நிர்வாகத்திடமிருந்து பக்தர்கள் எதிர்பார்ப்பு என்ன என்பதை விரிவாக எடுத்துரைத்தார்கள்.*

Commission of Endowments *ஸ்ரீ ஹரி ஜவஹர் ஐஅகு மற்றும்* Endowment Dept. *அமைச்சர் ஸ்ரீ கோடா ஸத்யநாராயண பங்கேற்று இம்மாதிரியான முகாம்களை மிகவும் பாராட்டினார்கள். கோவில் நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் சேவாபாவத்துடன் (அகம்பாவத்தை நீக்கி) செயல்பட வேண்டும் என்று அறுவுறுத்தினார்கள். பக்தர்களக்கு தரிசன அனுபவம் மிகவும் சிறப்பானதாக அமைய வேண்டும், அலுவலர்கள் கோவில்களில் பணிபுரியும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பது அவர்களுடைய பாக்யம்.*

*03.08.22 ஆடிப்பெருக்கு அன்று காவேரி பூஜை நடைபெற்றது. கலசத்தில் காவேரி ஜலம் வைத்து பூஜை செய்யப்பட்டது.*

*11.08.22 அன்று ரிக்வேதம் மற்றும் யஜுர் வேத உபாகர்மா காரியங்கள் நடைபெற்றன. காஞ்சீபுரம் ஸ்ரீ குருமூர்த்தி சாஸ்திரிகள் ரிக்வேத உபாகர்மாவையும், நெரூர் ஸ்ரீ ரமண சர்மா யஜுர் வேத உபாகர்மாவையும் சாஸ்த்ரோக்தமாக செய்வித்தார்கள்.*

*12.08.22 காயத்ரி ஜபம் நடைபெற்றது. அன்று ஸ்ரீ மடம் 69வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. சண்டிஹோமம், ஸுவாஸினி பூஜை, சாஸ்திர சபா, விசேஷ ஸுவர்ண பாதுகா பூஜை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*21.08.22 ஞாயிறன்று, காஞ்சிபுரம், திருவானைக்காவல், மணிமங்கலம், பூரி வேதபாடசாலை வித்யார்த்திகள் ஸுர்ய நமஸ்காரம் செய்தார்கள்.*

*23.08.22 சிவ ஆகம சதஸ் - ஆந்திராவிலுள்ள 400 சிவ ஆகம சிவாசார்யார்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.*

# மஹாளய ச்ராத்தம்

மாயூரம் ப்ரஹ்மஸ்ரீ தர்மக்ஞ M. ராமனாத தீக்ஷிதர்

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று**

குறள்.

ஒருவர் நமக்கு செய்த உபகாரத்திற்கு பதில் உபகாரம் முடிந்த வரை செய்தே தீர வேண்டும். நன்றியை மறந்தவனுக்கு ப்ராயசித்தம் கிடையாது. பாபங்களனைவற்றிற்கும் ப்ராயச்சித்தம் கூறும் முனிவர்கள் **'க்ருதக்னே நாஸ்தி நிஷ்க்ருதி:'** என்று கூறுகின்றனர்.

தாய் தந்தை, நமக்கு உடலாலும் பொருளாலும் செய்த உபகாரத்திற்கு நாம் எவ்வளவு ப்ரதி உபகாரம் செய்தாலும் கைமாறாகாது. ஆனாலும் நமது முன்னோர்கள் மஹரிஷிகள் வகுத்த வழியைப் பின்பற்றினால், ஒரு விதமாக சமாதானம் அடையலாம். அதாவது அவர்கள் ஜீவித்திருக்கும் பொழுது அவர்கள் சொல்லைக் கேட்டு தவறாமல் செய்வது. அவர்கள் விண்ணுலகம் சென்ற பிறகு ப்ரதி வருஷமும் இறந்த திதியில் சக்திக்குத் தக்கவாறு முறைப்படி ச்ராத்தம் செய்வது, கயா க்ஷேத்திரம் சென்று விஷ்ணுபாதத்தில் பிண்டம் போடுவது. இம்மூன்றில் ச்ராத்தம் என்பது ச்ரத்தை (நம்பிக்கை) யுடன் செய்வது. இதை ஒரு வருஷத்திற்கு 96 புண்ணிய காலங்களில் செய்யும்படி தர்ம சாஸ்திரம் கூறுகிறது. **'தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை'** இல்லறத்தில் வாழ்பவன் பித்ருக்களை பூஜிப்பது சிறந்த கடமையாகும் என்று குறள் கூறுகிறது. அதில் மஹாளய ச்ராத்தம் மிக அவச்யமானது. மற்ற ச்ராத்தங்களில் தந்தையின் வர்க்கம், தாயின் வர்கம், தாயின் தந்தையின் வர்கம். மட்டுமே திருப்தியடைகிறது. மஹாளயத்திலோவென்றால் மேலே சொல்லிய வர்க்கங்களைத் தவிர மற்றும் பலர் திருப்திடைகின்றனர். பெரிய தகப்பனார், சிறிய தகப்பனார், ஸஹோதரர்கள், ஸஹோதரி, அவள் புருஷன், அம்மான், அத்தை, தாயின் ஸஹோதரிகள், மாமனார், மாமியார். மைத்துனன், மனைவி, ஸபத்னீமாதா, ஆசிரியர், ஸ்னேஹிதன் முதலிய மற்றும் பலர் திருப்தி அடைகின்றனர்.

**மஹாளயம் செய்யும் காலம்**

மஹாளயபக்ஷம் ப்ரதமை முதல் அமாவாஸ்யை முடிய 15 நாட்களும், அல்லது மறு ப்ரதமை முடிய 16

நாட்களும், தினமும் மேற்கூறிய பித்ருக்களைக் குறித்து ஐந்து பிராமணர்களை வைத்து ச்ராத்தம் செய்ய வேண்டும். அல்லது பஞ்சமீ, அஷ்டமீ, தசமீ ஆகிய ஏதாவது ஒருநாளில் அமாவாஸ்யை முடியும் வரை தினமும் செய்யவேண்டும். இவ்வாறு செய்ய முடியாதவர்கள், பஞ்சமீ முதல் மறு பஞ்சமீ வரை ஒரு நாளாவது முன் கூறியபடி செய்யவேண்டும். இதற்கு 'ஸக்ருன்மஹாளயம்' என்று பெயர். இதைச் செய்பவர்கள் வெள்ளிக்கிழமை, ப்ரதமை, சதுர்தசீ மகா நக்ஷத்திரம், ஜன்ம நக்ஷத்திரம், மனைவி, மூத்தப் பிள்ளையின் நக்ஷத்திரம், தவிர மற்ற நாட்களில் செய்யவேண்டும். 'மஹாபரணீ, மத்யாஷ்டம், வியதீபாதம், துவாதசீ, கஜச்சாயை இவைகள் சிறந்த புண்ணிய கால மாதலால் அன்று செய்பவர்கள் மேலே சொல்லிய நாட்களை விலக்க வேண்டாம். தாய் தந்தையின் ச்ராத்த திதியில் மஹாளயம் செய்வதும் விசேஷம். ப்ருஹ்மசாரியும் விதவையும் அமாவாஸ்யை அன்றே செய்ய வேண்டும். ஸன்யாஸிக்கு துவாதசியன்றே செய்ய வேண்டும்.

மஹாளய பக்ஷத்தில் செய்ய முடியாதவர்கள் புரட்டாசி மாதம் முழுவதும் செய்யலாம். க்ருஷ்ண பட்சத்தில் செய்வது விசேஷமானது. அவ்விதம் முடியாதவர்கள் ஐப்பசி மாதம் முழுவதும் செய்யலாம். மஹாளய பக்ஷம் ஆரம்ப தினத்திலேயே அவரவரின் பித்ருக்கள் தனது வாஸஸ்தலத்தை விட்டுவிட்டு பிள்ளையின் வீட்டிற்கு வருகிறார்கள். கார்த்திகை மாதம் முதல் தேதி வரை எதிர் பார்க்கின்றனர். அது வரை மஹாளயம் செய்யாத போனால் கடுமையான சாபம் கொடுத்து விட்டு தனது லோகத்தையடைகின்றனர். ஆகையினால் பிச்சை எடுத்துச் சாப்பிடுபவர்கள் கூட, இந்த ச்ராத்தத்தை விடக்கூடாது. பித்ருக்களின் சாபம் ஸந்ததியைக் கெடுக்கின்றதென்று தர்மசாஸ்திரம் கூறுகிறது.

## மஹாளயம் செய்யும் முறை

மஹாளய ச்ராத்தம் அன்ன ரூபமாகவே செய்யவேண்டும். ஹோமம், பிண்ட ப்ரதானம் முதலியன அவச்யம். வருஷத்திற்கு ஒரு முறை செய்கின்றோம்.அவ்விதம் செய்ய சக்தியற்றவர்கள் ஹிரண்ய ச்ராத்தம் செய்யலாம். இதில் அன்ன ச்ராத்தத்தைவிட 4 மடங்கு தக்ஷிணை கொடுக்க வேண்டும். அவ்விதம் செய்து தர்ப்பணம் செய்வது ஒரு முறை. இவ்விதமும் செய்ய

சக்தியற்றவர்கள் எள்ளையும் ஜலத்தையும் கொண்டு தர்ப்பணம் செய்யவேண்டும் எவ்விதமாவது மஹாளயத்தை விடாமல் செய்ய வேண்டும். பிராஹ்மணர் அல்லாதாரும் ஆம (அரிசி) ரூபமாகச் செய்ய வேண்டும். தாய் தந்தை முதலியவர்களின் பெயரைச் சொல்லி நம: மந்திரத்துடன் செய்ய வேண்டும்.

மஹாளயத்தை ச்ரத்தையுடன் செய்பவர்களுக்கு பூர்ண ஆயுள், ரோகமில்லாமை, ஸந்ததியின் க்ஷேமம், பசுக்களின் ஸம்ருத்தி, ஆகியவை ஏற்பட்டு கடவுளின் உண்மையான அறிவும் ஏற்படுகிறது உண்மை.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# சங்கர கீதை

ப்ரதீபப் பேழை

ர. வேங்கடரத்தினம்

**காம, குரோத, மோக, லோபத்தை ஒழி**

கீதை நெடுகிலுமே இந்த உபதேசம்தான் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ நடைபெறுகிறது எனலாம். கண்ணபிரான் காம, குரோதாதி தீய பண்புகளைத் தவிர்த்து ஒழுகுமாறு அருளும் ச்லோகங்கள் நிறையக் காணலாம். ஓர் உதாரண ச்லோகம் இது-

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मन: ।
काम: क्रोधस्तथा लोभस्तस्मादेतत् त्रयं त्यजेत् ।। (16 -21)

**த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாச நமாத்மந:**
**காம: க்ரோதஸ் ததா லோபஸ் தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத் ।**

நரகத்திற்கு நுழைவாயில்கள் மூன்று என்று கீதாசாரியன் இந்த ச்லோகத்தில் தொடங்குகிறார். அந்த மூன்று வாயில்களுக்கும் தனித் தனியே பெயரும் சூட்டுகிறார். அந்தப் பெயர்களாவன: காமம் ஒன்று, குரோதம் ஒன்று, லோபம் மூன்றாவது. நம்மைப் பேரழிவிற்கு இட்டுச் செல்பவை இந்த மூன்று தீக் குணங்களுமே. நரகத்தில் நாம் இடர்ப்பட வழிகாட்டி அழைத்துச செல்லும் இந்தத் தீய இயல்புகளை நம்மிடமிருந்து அகற்றிவிட வேண்டும் என்பது கண்ணன் கட்டளை.

துறவியர் திலகமெனத் திகழும் சங்கர பகவத்பாதரும் காமத்தையும் குரோதத்தையும் லோபத்தையும் விட்டுவிடுமாறு உபதேசம் செய்யும் இடங்கள் அனந்தம். ஒன்றை இங்கே பஜகோவிந்தத்தில் பார்க்கலாம். (ச்-26):-

कामं क्रोधं लोभं मोहं त्यक्त्वाऽऽत्मानं भावय कोऽहम् : ।

**காமம் க்ரோதம் லோபம் மோஹம்**
**த்யக்த்வாத்மா நம் பாவய கோஹம்**

உன் விருப்பு, சினம், பேராசை, பற்றுதல் எல்லாவற்றையும் மரியாதையாகத் தூர மூட்டை கட்டி வைத்துவிட்டு, 'நான் எவன்?' என்று உன்னையே கேட்டுக்கொள் என்று இங்குப் போதனை செய்யப்படுகிறது,

காமத்தினின்றே கோபம் எழுகிறது; கோபம் மோகத்தைத் தோற்றுவிக்கிறது. இவ்வாறு மனிதனின் அழிவுச் சங்கிலியை வேறோர் இடத்தில் பகவத்கீதை பகரும்.(2-62,63)

कामात् क्रोधोऽभिजायते; क्रोधाद् भवति संमोह: ।

**காமாத் க்ரோதோபிஜாயதே; க்ரோதாத் பவதி ஸம்மோஹ:।**

ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் இந்த நான்கையுமே ஒழித்து அகற்ற வேண்டும்.

### வேதவழியே நல்வழி

பகவானை உணர்வதற்கு வேதம் கற்க வேண்டும். மறைகளை ஓதியுணர்ந்தோர் பிரம்ம சாட்சாத்காரம் பெறுகின்றனர். வேதத்தினால் அறியப்படுவது மெய்ப்பொருள். பரம்பொருளைப் பேசுவது தான் மறைகளின் பெருமையே.

இதற்கும் மேல், பகவான் கீதையில் பகர்வதாவது- வேதாந்தத்தை ஆக்கியவன் நானே; வேதங்களை அறிந்தவனும் நானே!

वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ।। (15-15)

**வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்யோ ।**
**வேதாந்தக்ருத் வே தன்தேவ சாஹம் ।।**

பரமனின் வாயிலாக மறைகளின் பெருமை பேசப் பெறுகிற இடம் இந்த வாக்கியம். கடவுள் ஒருவராலேயே புரிந்து கொள்ளத்தக்க ஞானக் கருவூலங்கள் வேதமாம். அவற்றை என்னவோ சாதாரண நூல்போல் எவரும் எண்ணத் தலைப்பட வேண்டாம் என்பது குறிப்பு. இறைவனே வேதம்; வேதமே இறைவன். वेदो वेदविदव्यङ्गो वेदाङ्गो वेदवित् (வேதோ வேதவிதவ்யங்கோ வேதாங்கோ வேதவித) என்பன திருமாலின் திருநாம் வரிசையில் வருவன.

வேதங்களை அறிந்தவன் இறைவன்; வேதங்களினால் அறிதற்குரியவனும் அவனே; வேதங்களையே தன் அங்கமாக -அம்சமாகக் கொண்டவனை பரமன்; வேதங்களை ஆய்பவனும் அவனே.

கௌபீன பஞ்சகம் வேத முழக்கத்தில் தொடங்குவதாகும். वेदान्तवाक्येषु सदा रमन्त: **வேதாந்தவாகயேஷு ஸதா ரமந்த :** என்று யதிகளை அறிமுகப்படுத்துவது முதல் வாக்கியம். எப்போதுமே உபநிஷத் வாக்கியங்களில் உள்ளம் திளைத்திருப்போர் அவர்கள்.

ஸோபான பஞ்சகமோ எடுத்த எடுப்பில் வேதமே பேசும்.

वेदो नित्यमधीयताम्, तदुदितं कर्म स्वनुष्ठीयताम् ।

**வேதோ நித்யமதீயதாம், ததுதிதம் கர்ம ஸ்வநுஷ்டீயதாம் ॥**

மறையினை நித்தம் ஓதி, அதில் கூறியபடி இனிது கர்மம் செய். திரும்பவும் மூன்றாம் ச்லோகத்தின் முதலடி, மறைகளின் உட்பொருளில் நாட்டம் கொள்ளுமாறு சொல்லும்-

இவை மூன்றாம் ச்லோகத்துப் பகுதிகள்.

वाक्यार्थश्र विचार्यतां श्रुतिशिर: पक्ष: समाश्रीयतां...
श्रुतिमतस्तर्कोऽनुसंधीयताम् ।

**வாக்யார்த்தஶ்ச விசார்யதாம் ஶ்ருதிசிர:பக்ஷ: ஸமாஶ்ரீயதாம்**
**ஶ்ருதிமதஸ தர்க்கோ நுஸந்தீயதாம் ।**

வேதவாக்கியங்களின் கருத்தை ஆய்ந்தறிக என்பது முதற்கட்டளை. மஹா வாக்கியத்தையும் இங்கு ஆசார்யர் குறிப்பிடுவதாகக் கொள்ள முடியும். மறையின் முடிவுகளை நீ ஆய்ந்தபின் ஏற்று நட என்பது தொடர்ந்து வரும் ஆசார்ய ஆஜ்ஞை. வேதத்திற்கு ஒத்த வாதங்களைத் தேடித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது மூன்றாம் வாக்கியம். வேதத்தின் உட்கருத்துக்களை நன்றாக உணர, எங்கெல்லாம் சென்று பேசிப் புரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவும் செய். வேத அறிவு கிடைக்கும் வாய்ப்பு எது அமையினும், விட்டுவிடாதே.

இவ்வண்ணம் 'வேதம் வேதம்' என்று ஆசார்ய பஞ்சகங்கள் வேதமயமாகவே பேசுகின்றன.

**பிராணாயாமாதிகள் செய்துவா**

யோகி யோகி என்று பேசும் பகவத்கீதை, யோகம் பயில வேண்டிய முறைகளைக் கூறாமலில்லை. கீதையின் ஆறாம் அத்தியாயம் தியான யோகம் எனப்படும்: ஆத்ம ஸம்யமயோகம் என்றும் கூறப்படும். அதில் வரும் ச்லோகங்கள் 12 முதல் 15 வரை யோகாஸனப் பயிற்சியையே மேலாக அளிப்பவை.

ஆஸனத்தில் உரிய முறையில் அமர்ந்து, உள்ளத்தை ஒரு வழிப்படுத்தி நிறுத்தி, பொறிகளின் செயல்களை ஒடுக்கி உள்ளம் தூய்மை பெறுவதற்காக யோகம் பயிலுமாறு யோகேச்வரனாகிய கிருஷ்ண பகவான் மொழிவார். ச்லோகம் 12-இல்.

13-ஆம் ச்லோகம் உடலைப்பற்றிய விதியை விளக்குவது-

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिर: ।
संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्रानवलोकयन् ।।

**ஸமம் காயசிரோக்ரீவம் தாரயந்நசலம் ஸ்திர: ।**

**ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஸர் சா நவலோகயந் ।।**

இங்கே, கீதாசாரியன் கலை, கழுத்து போன்ற உறுப்புக்களையும் உடலையும் எப்படி வைத்திருத்தல் வேண்டும் என விளக்குகிறார். எல்லாம் நேரே நிமிர்ந்த வண்ணமாக இருக்க வேண்டும். அசையாமல், உறுதியோடு இருந்து கொண்டு, மூக்கின் நுனியை நோக்குகிறாப்போல் திசைகளைப் பாராது இருத்தல் வேண்டும். புறக்காட்சி ஏதும் கண்ணில் படலாகாது என்பது குறிப்பு.

இப்படி நீளமாகச் செல்கிறது கீதையில் யோகம் பயில்வதற்கான குறிப்பு! அப்படி விரிவாக ஆதிசங்கரர் ஏதும் கூறவில்லை, பஜகோவிந்த நூலில். சுருக்கமாக ஒரே ச்லோகத்தில் 'பிராணாயாமம் செய்துவா' என்று மட்டும் கூறுவார். கடைசி ச்லோகம் இது-

**प्राणायामं प्रत्याहारं नित्यानित्यविवेकविचारम् ।**
**जाप्यसमेतंसमाधिविधानं कुर्ववधानं महदवधानम् ।।**

**ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம் நித்யா நித்யவிவேகவிசாரம் ।**

**ஜாப்யஸமேதஸமாதிவிதாநம் குர்வவதாநம் மஹதவதாநம் ।।**

இங்கே கூறப்படும் பிராணாயாமம், பிரத்தியாஹாரம், ஸமாதி என்பவை யோகத்தின் பகுதிகளாம். அழிவு, அழிவிலாத்தன்மை பற்றியெல்லா' சிந்தித்து வருமாறும் இங்குக் கூறப்படுகிறது.

விவேக விசாரம் (அல்லது விவேகம் ஊட்டும் விசாரணை) மனத்தில் இடம்பெற வேண்டும் என்பதும் உபதேசிக்கப் பெறுகிறது. இறைவன் திருநாமத்தை ஜபித்த வண்ணம் ஸமாதி யோகத்தைப் பயிலுமாறு கூறுகிறார் பகவத்பாதர். ஏனெனில் அதுவே மகத்தான முறையாகும்.

**உலகியல் இன்பம் துன்பத்திற்கு ஆதாரம்**

வாழ்க்கையில் நாம் இன்பம் என்றும் துன்பம் என்றும் வருவனவற்றை யெல்லாம் இரு

கூறாக்கிக் காண்கிறோம். நிகழ்வன அனைத்தும் துன்பமோ இன்பமோ தருவனவாகத் தோற்றுகின்றன. ஆனால், உண்மையோ முற்றும் வேறு என்பது ஞானிகள் உணர்த்துவது. உலகியல் இன்பங்கள் யாவுமே நம்மை இறுதியில் துன்பத்தில் கொண்டுபோய்த் தள்ளுகின்றன. நாம் இன்பம் எனக் கருதி மனமகிழும் பல விஷயங்கள் நம் துன்பத்திற்கு அடிகோலுகின்றன. இந்தப் பழம் பேருண்மையைக் கண்ணபிரான் கீதையில் ஆங்காங்கு வலியுறுத்துவார். துக்கத்தை அளிப்பவை இன்ன இன்ன என்னும் பட்டியலும் ஆங்காங்கு விரிக்கப்படும். புலன்களுக்கு மகிழ்வூட்டுவன எவையோ அவைதாம் உண்மையில் துன்பத்திற்கு வித்து என்று குந்திமைந்தனிடம் கண்ணபிரான் அருளும் ச்லோகம் வருமாறு-

ये हि संस्पर्शजा भोगा दु:खयोनय एव ते ।
आद्यन्तवन्त: कौन्तेय न तेषु रमते बुद: ।।

**யே ஹி ஸம்ஸ்பர்ஜா போகா து:கயோ நய ஏவ தே ।**
**ஆத்யந்தவந்த: கௌந்தேய நதேஷூ ரமதே புத: ।।**

நாம் போகம் என்று குறிப்பது புலன்களின் இன்பநுகர்ச்சியையே. அத்தகைய இந்திரிய இன்பம் ஊட்டுபவை எவை எவையெல்லாம் உண்டோ, அவை அனைத்தும் துன்பத்தின் பிறப்பிடம் என்று கூறுகிறது இவ் வாக்கியம். அறிவாளி அதுபோன்ற சிறுநேர இன்பத்தில் திளைப்பவனல்லன். 'ஆதி, அந்தம் உள்ள இன்பம்' என்று பகவான் பகர்வது அநித்திய ஆனந்தத்தை. ஞானி நாடுவதோ பேரின்பத்தை!

இந்தக் கருத்தை ஆதி ஆசார்யர் ஒரே வாக்கியமாகத் தம்முடைய ஸோபான பஞ்சகத்தில் அருளுவார். முதல் ச்லோகத்தில் மூன்றாம் அடியின் பிற்பாதி இது--

**பவஸுகே தோஷோநுஸந்தீயதாம் ।**

'உலகியல் இன்பத்தைப் பெரிதாகக் கருதாமலிருந்தால் மட்டும் போதாது. அதன் குறைபாடுகளைப் புரிந்துகொள்' என்று ஆசார்யர் வற்புறுத்துகிறார். இகலோகத்து மகிழ்ச்சி. யாவும் மாசுடைத்து என்பதை மனத்தில் என்றும் இருத்திக் கொள்ள வேண்டும். மாசுடைய இன்பம் என்றால் என்ன, துன்பம் என்றால் என்ன? எல்லாம் ஒன்றுதானே?

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

புலவர் மா வெங்கடேசன்



காஞ்சீபுராணம் பற்றிய எனது அறிவை வைத்துப் பெரியவா ஒரு பெரிய திட்டமே வைத்திருந்தார் போலும். அவர் கூறியபடி பாலக்ருஷ்ண சாஸ்த்ரிகள் தெலுங்கு காஞ்சி புராண அடிப்படையிலான சிவ ஆலயங்களின் பட்டியலை அளித்தார்கள்.

அதில் 104 ஆலயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. நான் தந்த பட்டியலையும் அவர் தந்த பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் பெரும்பாலும் இரண்டும் ஒத்திருந்தன. ஆனால் தெலுங்கு புராணத்தில் இருந்த சில தமிழில் இல்லை. தமிழில் இருந்த சில தெலுங்கில் இல்லை. தமிழில் இல்லாத தெலுங்கு குறிப்பிடும் கோயில்களை அவை இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த ஸ்ரமத்தை பெரியவாளிடம் தெரிவித்தபோது அவர் அடியேனுக்கு வேறு ஒரு பணியினைத் தந்தருளினார்கள்.


கோயில் இல்லாமல் பல சிவ லிங்கங்கள் கழனிகளிலும் பட்டா நிலங்களிலும் இருந்தன. அவ்விடங்களில் கோயில் கட்டுவதற்கு அந்த சில உரிமையாளர்களிடம் சம்மதம் பெற வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட சில உரிமையாளர்கள் பிள்ளையார் பாளையத்தில் இருந்ததால் அவர்களிடமிருந்து சம்மதம் பெற்று வருமாறு என்னைப்

பணித்தார்கள். அந்த பணியை சிரமேற்கொண்டு முயன்றதில் சிவலிங்கங்கள் உள்ள இடங்களை அவைகளின் சொந்தக்காரர்கள் கொடுக்கச் சம்மதித்தனர்.

முன்னர் கோயில் கட்ட ஒத்துக் கொண்டவர்களுக்குத் தகவல் அனுப்பபட்டது. இவ்வாறு கற்கீசர் (கல்கி வடிவில் வந்த திருமால் வழிபட்டது கற்கீசம்) அவரோடு வந்த திருமகள் வழிபட்டது லக்ஷ்மீசம்) லக்ஷ்மீசர் கோயில்கள் கட்டப்பட்டன. மகாபெரியவர் முன்னிளையிலேயே இத்திருக்கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடை பெற்றன. அப்போது அந்த நிலத்தை கோவில் கட்ட மனமுவந்து அளித்த அதன் உரிமையாளர் ஸ்ரீ ஷண்முக முதலியாருக்குச் சால்வை அளித்து கௌரவித்தார்கள். அடியேனையும் அங்கே அழைத்து அதனை செய்வித்த பெரியவாளின் பெரும் கருணை இன்னும் என் உள்ளத்தை நெகிழ்வித்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

## ஆண் கடத்தல்-- அசரீரி வாக்கு

இதுவென்ன? ஆண் கடத்தல்? அசரீரி என்ன செய்தது? என்று சிஷ்யன் கேட்க பௌராணிகர் சிரித்துக் கொண்டே கூறலானார். நிறைய பெண் கடத்தல் கேட்டிருக்கிறோம். இப்பவும் கேட்கிறோம். பணத்துக்காக ஆண் கடத்தல் இப்போது நடக்கிறது.

அக்காலத்தில் நடந்த ஓர் ஆண் கடத்தல் பற்றிய கதை. அதுவும் ஓர் அசரீரியினால் வந்த விளைவு. கம்சனுக்கு அசரீரி ஒன்று எமனாய் வந்தது. க்ருஷ்ண ஜனனம் வந்தது. இந்த அசரீரி செய்ததைப் பார்ப்போம். இதுவும் க்ருஷ்ண சம்பந்தம் தான் என்று கதையை ஆரம்பித்தார்.

சம்பாசுரன் மகா துஷ்டன். இறுமாப்புடன் இருந்தவன். அவன் மனைவி மாயாவதி. சம்பாசுரனுக்கு க்ருஷ்ண ருக்மணியின் பிள்ளையினால் மரணம் ஏற்படும் என்று ஓர் அசரீரி கூற வந்தது வினை. கர்பவதியான ருக்மணி பிள்ளை பெற்ற ஆறாம் நாள் தந்த்ரமாக சம்பாசுரன் அந்த குழவியை கடத்தி அது அழியட்டும் என்று கடலில் வீசினான்.

இனி தன்னைக் கொல்ல க்ருஷ்ணனின் புத்ரன் இல்லை என்ரு இறுமாப்புடன் இருந்தான். அவனது போறாத வேளை அக்குழவியை ஒரு சுராமீன் விழுங்க அது பெரிய மீன் என்பதால் அதை செம்படவன் மாயாவதி ராணிக்கு சமர்ப்பித்தான்.

அவள் அந்த சுராமீனை வெட்ட அதனுள் ஒரு அழகிய குழந்தை இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள். அந்த சமயம் நாரதர் அங்கு வர அவளிடம் ‘‘இது க்ருஷ்ணனின் குழந்தை. இது வேறு யாருமில்லை உன் கணவன் காமனே. நீயும் ரதிதான். விரைவில் இருவரும் சேர்வீர்கள் என்று கூறினார்

(முன் காலத்தில் பரம சிவனால் காமதஹனம் ஆனபின் ரதி மாயத்தால் மாயவதியானாள். தன் கணவன் மன்மதனுக்காக காத்திருந்தாள். க்ருஷ்ணரே புத்ரப்ராப்த்திக்காக சிவனை

நாட அவரும் மன்மதனே அவருக்குப் புத்ரனாக பிறப்பான் என்று அருளினார். பார்வதி தேவியும் ரதியிடம் மாயாவதியாய் பிறந்து அவனுக்காகக் காத்திருந்து மணம் முடிக்க அருளினாள். இது எதுவும் சம்பாசுரனுக்குத் தெரியாது. )

க்ருஷ்ணனின் புத்ரன் ப்ரத்யும்னன் மாயாவதியால் சம்பாசுரனுக்குத் தெரியாமல் வளர்க்கப்பட்டான். அவள் அவனுக்கு மாயவித்யைகளைக் கற்பித்தாள். மாயப் போர் செய்வது பற்றியும் கற்பித்தாள். அவன் யுவன் ஆனான். காதல் வயப்பட்ட அவள் அவனிடம் இயற்கைக்கு மாறாக நடக்க ஆரம்பித்தாள். இது கண்ட ப்ரத்யும்னன் அவளிடம் நீங்கள் எனக்குத்தாய். ஏன் இந்த விபரீதம்? என்று கேட்க அவளும் பூர்வகதையைச் சொல்லி சம்பாசுரனின் மரணம் அவன் கையில் தான் உள்ளது என்றும் கூறினாள்.

சிற்சில சம்பவங்களால் ஐயம் உண்டான சம்பராசுரன் தன் வீட்டிலேயே தன் எதிரி வளர்வதைக் கண்டு கொதித்தெழுந்தான். அவனுடன் போரிட யத்தனிக்க அதை முறியடித்தான் ப்ரத்யும்னன். தன் மாயா யுத்ததை பலமுடன் அசுரன் காண்பிக்க அது முழுவதையும் முறியடித்து அவனை மாய்த்தான் ப்ரத்யும்னன். மாயாவதியும் ப்ரத்யும்னனும் த்வாரகைக்குச் சென்றனர். அவர்களைப் பார்த்த ருக்மணி தன் புத்ரன் உயிருடன் இருந்திருந்தால் ப்ரத்யும்னன் போல் இருப்பான் என்று ஏக்கத்துடன் சொல்ல அப்போது அங்கு வந்த நாரதர் ப்ரத்யும்னனே அவளுடைய புத்ரன், அவனே பூர்வ ஜன்மத்தில் மன்மதன், சிவனுடைய அருளால் ப்ரத்யும்னனாக பிறந்தவன், மாயாவதி பூர்வ ஜன்மத்தில் ரதி என்று விளக்கி அவளுடைய ஏக்கத்தை போக்கினார். அவர்களிருவருக்கும் விவாஹம் நடைபெற்றது.

அசரீரி வாக்கும் பலித்தது. என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

(விஷ்ணு புராணம்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

யுத்த சன்னாதம் எங்கும் எதிரொலித்தது. இரு பக்கத்திலும் வீரர்கள் யுத்ததிற்குத் தயாராயினர். அர்ஜுனன் தயாராகிவிட்டதைக் கண்ட வீரர்கள் கோஷம் புரிந்தனர்.



அப்போது அதைக் கண்ட தர்மர் நிராயுத பாணியாக தம்பிகள் சூழ, அஞ்சலி செய்பவராக பீஷ்மரை நோக்கி வந்தார். அவரது கால்களில் வீழ்ந்து வணங்கி பிதாமஹரே ஜயிக்க முடியாதவரே உங்களை எதிர்த்துப் போரிட அனுமதி தாரும். ''ஆசீர்வாதம் செய்யுங்கள்'' என்றார்.

பீஷ்மர் மிக்க மகிழ்ச்சி ''தர்மரே! யுத்தம் செய், ஜயம் அடை'' அதே போல் தர்மர் த்ரோணாசார்யர் இருக்குமிடத்திற்குச் சென்று அவரை வணங்கி ''ஆசார்யரே யுத்தத்திற்கு அனுமதி அளியுங்கள். கல்மஷம் இல்லாமல் போரிடுவேன்'' என்று கூறினார்.

த்ரோணாசார்யர் மகனே நீ ஜயம் அடைவாய். ''க்ருஷ்ணன் கூட இருக்க அச்சம் வேண்டாம். எங்கு க்ருஷ்ணரோ அங்கு தர்மம் இருக்கும்'' என்று கூறினார். பின்பு தர்மர் க்ருபரை வணங்க யுத்தம் செய் உனக்கு ஜயம்'' என்றார். தர்மர் பின்பு சல்லியனிடம் ஆசீர்வாதம் வாங்கி தன்னிருப்பிடம் வந்தார். அப்போது க்ருஷ்ணர் கர்ணனைப் பார்த்து ''கர்ணா பீஷ்மர் இருக்கும் வரை போரிட மாட்டாயாமே. அதுவரை எங்கள் பக்கம் வந்துவிடு'' என்றார்.

கர்ணன் ''துர்யோதனனுக்கு துரோஹம் செய்ய மாட்டேன். அவனுக்காக என்

உயிரையும் ஈவேன்.'' அப்போது தர்ம புத்ரர் உரத்த குரலில் கோஷமிட்டார். யுத்தம் தொடங்க உள்ளது. எங்கள் பக்கம் சேர விருப்பமுடையவர்கள் வரலாம்''

தர்மரின் கோஷத்தைக் கேட்ட யுயுத்ஸு கௌரவ சேனையை விட்டு விலகி துந்துபிகள் முழங்க பாண்டவர்கள் பக்கம் வந்து சேர்ந்தான்.

**யுத்தம்**

பீஷ்மர் அர்ஜுனை த் தாக்க அவனும் அவரைத் தாக்கினான். மிகப்பெரிய துமுல யுத்தம் தொடங்கியது. வீரர்களின் ஹா ஹா சப்தம் எங்கும் பரவியது. குதிரைகளின் கனைப்புகளும் யானைகளின் பிளிறல்களும் வீரர்களின் கோஷமும், அம்புகளால் அடிபட்டு வீழ்ந்த வீரர்களின் அவல ஓசையும் எங்கும் நிறைந்தது. புழுதியுடன் கூடிய யுத்தபூமி இறந்த சடலங்களை உடையதாக இருந்தது. பீஷ்மர் பராக்ரமத்துடன் தன் கை லாகவத்தைக் காட்டி தான் எங்கும் இருப்பவராக பயங்கரமாகப் போரிட்டார். க்ருஷ்ணர் தேரை வெகு லாகவமாக யுத்த பூமியில் செலுத்தினார். ஒரு கட்டத்தில் பீஷ்மர் அர்ஜுனனையும் க்ருஷ்ணரையும் தன் அம்புகளால் பலமாகத் தாக்கினார். பீஷ்மரின் வேகத்தைக் கண்ட க்ருஷ்ணர் 'இப்போதே பீஷ்மரைக் கொல்வேன்' என்று கூறி தேரிலிருந்து இறங்கி சக்ராயுதத்துடன் பீஷ்மரை நோக்கிப் போனார். அவர் வருவதைக் கண்ட பீஷ்மர் கூறினார்.

''தாமரைக்கண்ணா! வா வா! சக்ர பாணியே உனக்கு நமஸ்காரம். உலக நாயகனே என்னை பூமியில் தள்ளு. உன்னால் கொல்லப்பட்டால் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பெருமை பெறுவேன். அதுவே எனக்கு பஹுமானமாகும்''

ரதத்திலிலிருந்து ஓடும் க்ருஷ்ணரை பின் தொடர்ந்த அர்ஜுனன் ''கோபம் கொள்ளாதே க்ருஷ்ணா'' என்று கூறி அவரை சமாதானப்படுத்தினான். இப்படி யுத்தமானது பத்தாம் நாள்வரை நடந்தது. இந்த பத்து நாளிலும் பீஷ்மர் புகையில்லாத அக்னியாய் திகழ்ந்தார். அர்ஜுனன் சிகண்டியை முன் வைத்து பீஷ்மரை எதிர்த்துப் போரிட்டான்.

சிகண்டியும் பீஷ்மரின் மர்மஸ்தான்னகளைத் தாக்கினான். அவரோ அவன் பெண் என்ற காரணத்தால் திருப்பி அவனை அடிக்கவில்லை. அப்படியிருக்கையில் அர்ஜுனனும் சிகண்டியும் பீஷ்மரை பலமாகத் தாக்க சிரித்துக் கொண்டே அவர் கூறுவார். '' இவை அர்ஜுனனின் பாணங்கள் சிகண்யினுடையது அல்ல' என்று. இரண்டு விரற்கடை இடமில்லாமல் அவர் உடல் பாணங்களால் நிரம்பப்பட்டிருக்க தேரிலிருந்து கிழக்குப் பக்கம் தலையிருக்க பூமியில் விழுந்தார்.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




262. **கேள்வி :** ஒருவர் எப்போது பதிதனாவார்?

**பதில் :** க்ருத யுகத்தில் ஒரு பதிதனுடன் பேசுவதாலேயே, த்ரேதா யுகத்தில் தொடுவதால், த்வாபர யுகத்தில் அவன் அன்னத்தை உண்பதால், கலியுகத்தில் பாப கர்மாக்களைச் செய்தால்

263. **கேள்வி : கலியில் எவை மகா பாபங்கள்?**

**பதில் :** ப்ரம்ம ஹத்தி, சுரா பானம், ஸ்வர்ண தேயம், குரு தல்ப கமனம்.

264. **கேள்வி : ஒருவரை பாபம் எப்போது சேரும்?**

**பதில் :** ஒரு பாபியுடன் சேர்ந்து அமர்ந்து, படுத்து , பேசி உண்பதாலும் பாபம் சேரும்

265. **கேள்வி : ஸங்கரம் என்பதென்ன?**

**பதில் :** ஒரே படுக்கையில் படுப்பது, ஒரே ஆஸனத்தில் அமர்வது, ஒரே பாத்ரத்திலிருந்து உண்பது, ஒரே பாத்ரத்தில் சமைப்பது

266. **கேள்வி : அதிக்ஷேபம் என்றால் என்ன?**

**பதில் :** ஒருவரை அவமதிப்பது

267. **கேள்வி :** நக்னன் யார்?

**பதில் :** க்ருஹஸ்தாஸ்ரமத்தை விட்ட பின்னும் வானப்ரஸ்தனாகவோ, ஸன்யாசியாகவோ மாறாதவன் .

268. **கேள்வி : பர பாக நிவ்ருத்தன் யார் ?**

**பதில் :** பஞ்ச மஹா யஞ்யங்களைச் செய்யாதவர்.

269. **கேள்வி : பரபாக ரதன் யார்?**

**பதில் :** பஞ்ச மஹா யஞ்யங்களைச் செய்தும், அடுத்தவர் அன்னத்தை உண்பவர்.

**270. கேள்வி : அபசன் யார்?**

**பதில் :** க்ருஹஸ்தனாயிருந்தும் அன்ன தானம் செய்யாத ப்ராம்மணன்.

271. **கேள்வி : தீர்க ஸத்ரம் என்றால் என்ன?**

**பதில் :** ஒரு ப்ராம்மணன் ஓராண்டு அல்லது இரண்டாண்டு தினமும் அன்னதானம் செய்வதாய் ஸங்கல்பித்து செய்து வருவதற்கு தீர்க ஸத்ரம் என்று பெயர்.

272. **கேள்வி : சிவ நிவேதனத்தை உண்ணலாமா?**

**பதில் :** உண்ணக் கூடாது. ஆனால் விஷ்ணு முதலான தேவர்களுடன் சேர்ந்துள்ள சிவனுக்குச் செய்த நிவேதனத்தை உண்ணலாம்.

273. **கேள்வி : அனார்ஜவம் என்றால் என்ன?**

**பதில் :** நேர்மையாக இல்லாதிருத்தல்.

274. **கேள்வி : பைசுனம் என்றால் என்ன?**

**பதில் :** பிறரை தூஷித்தல், கோள் சொல்லுதல்

273. **கேள்வி : ப்ரதிஷித்த ஆசாரம் என்றால் என்ன?**

**பதில் :** நியமங்களை அனுஷ்டிக்காமல் இருப்பது.

(தொடரும்)